**விலைவாசியைக் குறைக்க மாநில உதவி அவசியம்: மன்மோகன் சிங்**

First Published : 02 Feb 2010 12:00:00 AM IST

Last Updated : 02 Feb 2010 02:41:17 AM IST




**தில்லியில் நடைபெற்ற மாநிலத் தலைமை செயலர்கள் ஆண்டு மாநாட்டில் பேசுகிறார் பிரதமர் மன்மோகன் சிங்.**

புதுதில்லி, பிப். 1: விலைவாசியைக் குறைக்க மாநிலங்களின் உதவி அவசியம் என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறினார்.

மேலும் விலை உயர்வைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநில அரசுகளுக்கு அவர் வேண்டுகோள் விடுத்தார்.உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

தில்லியில் திங்கள்கிழமை நடைபெற்ற மாநில தலைமைச் செயலர்கள் மாநாட்டில் பேசும்போது அவர் இவ்வாறு கூறினார்.

அத்தியாவசியப் பொருள்களின் பற்றாக்குறையை போக்க மாநில அரசுகள் முனைப்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். இதற்கு மத்திய அரசு சாத்தியமான அனைத்து உதவிகளையும் செய்யத் தயாராக உள்ளது என்று அவர் உறுதியளித்தார்.

கடந்த 2 ஆண்டுகளில் நமக்கு ஏற்பட்ட கசப்பான அனுபவத்தின் மூலம் உணவு தானிய கையிருப்பை அதிகரிப்பதும் விலை உயர்வை கட்டுப்படுத்துவதும் அவசியம் என்பதை உணர்ந்துள்ளோம்.

சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ள விலை உயர்வு மற்றும் உணவுப் பற்றாக்குறையின் தாக்கம் நம்மையும் பாதிக்கும் என்பதை மறுப்பதற்கு இல்லை என்றார் அவர்.

நம்மிடம் போதிய உணவு கையிருப்பு உள்ளது. நமக்கு உணவுப் பற்றாக்குறை ஏற்படாது என்று தவறாக கருதிக்கொண்டிருந்தோம். ஆனால் நாளுக்கு நாள் மக்கள் தொகை அதிகரிப்பதால் உணவு தேவையும் அதிகரித்துள்ளது என்றார் அவர்.

வேளாண் பொருள்களின் உற்பத்தி பெருமைப்படும் படியாக இல்லை. உலகின் முதலிடத்தில் உள்ள நாடுகளை ஒப்பிடும்போது நாம் மிகவும் பின்தங்கி உள்ளோம். எனவே மாநில அரசுகள் உணவு தானிய உற்பத்தியில் முழு கவனத்தையும் செலுத்தி தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். நெல், கோதுமை, கரும்பு போன்ற முக்கியப் பயிர்களின் விளைச்சலை பெருக்க இது உதவியாக இருக்கும்.

பொது விநியோக திட்டம்: பொது விநியோக திட்டத்தை வலுப்படுத்தி அத்தியாவசியப் பொருள்கள் நியாயமான விலையில் ஏழை, சாமானிய மக்களுக்கு போதிய அளவில் கிடைப்பதற்கு வழிகாண வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

வளர்ச்சி ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டம், தேசிய ஊரக சுகாதாரத் திட்டம், ஜவாஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டம் , சிறுபான்மையினருக்கான 15 அம்சத் திட்டம் என பல்வேறு திட்டங்களை மத்திய அரசு செயல்படுத்தி வருவதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த திட்டங்கள் அதன் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அமல்படுத்தப்படுகிறதா என்பதை அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். மேலும் இந்தத் திட்டங்கள் முறையாகச் செயல்படுத்தப்படுவதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும் என்றார் அவர்.

வேளாண்மைக்கு திறமையான அதிகாரிகள்: வேளாண் உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் மாநில அரசு தன்னிடம் பணியாற்றும் அதிகாரிகளில் திறமையான அதிகாரிகளை வேளாண் உற்பத்தி ஆணையராக நியமிக்க வேண்டும்.

கடந்த ஆண்டுகளில் வேளாண் உற்பத்தி ஆணையர் பதவிக்கு மவுசு இல்லை. இதனால் திறமையான அதிகாரிகள் அந்த பதவியை விரும்புவதில்லை. இந்த நிலை மாற வேண்டும்.

அடிப்படை கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் இல்லாதது சர்வதேச அளவில் நமது நாட்டின் நற்பெயரை கெடுப்பதாக உள்ளது. தொழில் முதலீட்டை பெரும் அளவில் ஈர்க்க அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மாநில அரசுகள் மேம்படுத்த வேண்டும். அடிப்படை கட்டமைப்பு வசதிகள் சிறப்பாக உள்ள மாநிலங்கள் அதிக முதலீட்டை ஈர்த்துள்ளன. மற்ற மாநிலங்கள் பின்தங்கி உள்ளன.

சட்டம், ஒழுங்கு: சட்டம் ஒழுங்கு சிறப்பாக இல்லையெனில் பொருளாதார வளர்ச்சியைப் பாதிக்கும். எனவே சட்டம் ஒழுங்கை காப்பது ஒரு மாநில அரசின் முக்கியப் பணியாகும். பயங்கரவாதம், தீவிரவாதம் போன்றவற்றை உறுதியாகவும் அதேநேரத்தில் புத்திசாலித்தனமாகவும் செயல்பட்டு ஒடுக்க வேண்டும்.

அதிகாரிகள் புதிய சிந்தனைகளோடு புத்துணர்வோடும் விரைவாகவும் செயலாற்ற வேண்டும். மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்து வருவதால் அது பூர்த்தியாகத நிலையில் அவர்கள் அதிருப்திக்குள்ளாகின்றனர். ஊழல் மற்றும் மெத்தனம் போன்றவற்றாலும் மக்கள் அதிருப்தியில் உள்ளனர். இவற்றைக் களைய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

**மேட்டுப்பாளையம் மார்க்கெட்  வட மாநில உருளைக்கிழங்கு வரத்து அதிகரிப்பு**

First Published : 02 Feb 2010 12:24:43 AM IST

மேட்டுப்பாளையம் பிப்,1: மேட்டுப்பாளையத்தில் உள்ள உருளைக்கிழங்கு மொத்த விற்பனை மார்க்கெட்டில் நீலகிரி கிழங்கின் வரத்து குறைந்ததையடுத்து, தேவைகளைப்  பூர்த்திசெய்ய, கோலார் மற்றும் வட மாநில கிழங்குகளின் வரத்து அதிகரித்துள்ளது.

நீலகிரி மாவட்டத்தின் நுழைவு வாயிலாக உள்ள மேட்டுப்பாளையம், நீலகிரி மலைப் பகுதிகளில் விளையும் உருளைக் கிழங்கு, காரட், கோஸ், பீன்ஸ், முள்ளங்கி போன்ற இங்கிலீஸ் காய்கறிகளின் விற்பனை மையமாக உள்ளது.

இங்குள்ள 100}க்கும் மேற்பட்ட தனியார் மண்டிகள் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனை மையத்திற்கு, தினமும் நீலகிரி கிழங்கு மற்றும் காய்கறிகள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது.

நீலகிரி பகுதி விவசாயிகள் மே மாதத்தில் கார்போகம் எனும் சீசனிலும், நவம்பர் மாதத்தில் கடபோகம் எனும் சீசனிலும் கிழங்கு பயிரிடுகிறார்கள். ஆனால் சமீபகாலமாக இடுபொருட்கள் விலை உயர்வால் உற்பத்திச் செலவு அதிகரித்ததை தொடர்ந்து, நீலகிரி பகுதிகளில் கிழங்கிற்கு மாற்றாக, காரட்,கோஸ் போன்ற காய்கறிகளையே அதிகம் பயிரிடுகின்றனர்.

தற்போது, நீலகிரி கிழங்கு சீசன் முடிவடைந்து வருவதால் தினமும் குறைந்த மூட்டைகளே விற்பனைக்கு வருகின்றன. ஆதலால் கேரளா மற்றும் தமிழகத்தின் கிழங்குத் தேவைகளைப் பூர்த்திசெய்ய, தற்போது வட மாநில கிழங்குகளின் வரத்து அதிகரித்துள்ளது. திங்கள்கிழமை கோலார், நைனிடால் பகுதி கிழங்குகள் மட்டுமே விற்பனைக்கு வந்து 1 மூட்டை ரூ.380 முதல் ரூ.450 வரை விற்றது.

நீலகிரி சீசன் தொடங்கும் ஜூன் மாதம்வரை, கோலார் மற்றும் வட மாநில கிழங்குகளின் மூலமே, மேட்டுப்பாளையம் மார்க்கெட்டின் கிழங்குத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என நகரின் முன்னணி கிழங்கு வியாபாரி விஎன்ஆர். சண்முகம் தெரிவித்தார்.

பூண்டு வரத்து அதிகரிப்பு: நீலகிரி மாவட்டத்தில் வெள்ளைப்பூண்டு சீசன் தொடங்கியதையடுத்து,மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் பூண்டு வரத்து அதிகரித்துள்ளது.

மேட்டுப்பாளையத்தில் உள்ள பூண்டு மண்டிகளுக்கு நீலகிரி, குண்டல்பெட், ஆசனூர், தாளவாடி, கேர்மாலம், உடையார்பாளையம் மற்றும் மத்தியப்பிரதேச மாநில பகுதிகளிலிருந்து வெள்ளைப்பூண்டு விற்பனைக்கு வருகிறது. தற்போது வட மாநில பகுதிகளில் வெள்ளைப்பூண்டு சீசன் முடிவடைந்துள்ளது. அதை ஈடுகட்டும் வகையில்

நீலகிரி மாவட்ட பூண்டு சீசன் தொடங்கி உள்ளது. இதனால் மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் நீலகிரி பூண்டு வரத்து அதிகரித்துள்ளது.

**தஞ்சையில் பயிர்க் காப்பீடுத் திட்ட முகவர்களுக்குப் பயிற்சி**

First Published : 02 Feb 2010 04:58:08 AM IST

தஞ்சாவூர், பிப். 1: சென்னை பயிர்க் காப்பீடு நிறுவனம், தஞ்சாவூர் மாவட்டத்தில் மழைக் காப்பீடுத் திட்டம், காலநிலை காப்பீடுத் திட்டம் உள்ளிட்ட சிறப்பு காப்பீடுத் திட்டங்களை நிறைவேற்ற தஞ்சை சூழலியல் ஆய்வு மையத்தை அறிவித்துள்ளது.

இந்த மையம் சார்பில் மாவட்டத்தில் பல்வேறு வட்டங்களில் செயல்பட்டு வரும் உழவர் மன்ற அமைப்பாளர்கள், முன்னோடி விவசாயிகள் மற்றும் கிராம அறிவுப் பணியாளர்களை, வட்டார அளவில் துணை முகவர்களை நியமித்து, அவர்கள் மூலம் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

தஞ்சை மாவட்டம் மட்டுமன்றி சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலும் துணை முகவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாவட்டங்களைச் சேர்ந்த 50 முகவர்களுக்கு திட்டச் செயல்பாடு குறித்த பயிற்சி முகாம் தஞ்சாவூரில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

சென்னை மண்டல அலுவலக நிர்வாக அலுவலர் எஸ். சூரிய நாராயணன், மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் வ. பழனியப்பன் (தஞ்சை), எஸ். ஜெகதீசன் (சேலம்) ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

முகாமில் முகவர்களுக்கு திட்டச் செயல்பாடு குறித்த கையேடு வழங்கப்பட்டது. ஏற்பாடுகளை சுற்றுச்சூழலியல் மையச் செயலர் விஜய ராமலிங்கம் செய்திருந்தார்.

### பவானிசாகர் அணை  நீர்மட்டம் 85.43 அடி

First Published : 02 Feb 2010 12:15:41 AM IST

ஈரோடு, பிப்.1: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 85.43 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 546 கன அடி வீதம் தண்ணீர் வந்தது. அணையிலிருந்து ஆற்றில் விநாடிக்கு 950 கன அடியும், பாசனக் கால்வாயில் விநாடிக்கு 5 கன அடியும் தண்ணீர் திறக்கப்பட்டது. அணை நீர் இருப்பு 18.74 டிஎம்சி.

### மரக் கன்று நடும் விழா

First Published : 02 Feb 2010 05:39:20 AM IST

போச்சம்பள்ளி, பிப். 1: பர்கூர் ஒன்றியம் பாரண்டபள்ளி ஊராட்சி ஆரம்பப் பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகள் திங்கள்கிழமை நடப்பட்டன.

விழாவுக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றியத் தலைவர் என்.வெங்கடேஷ் தலைமை வகித்தார். தலைமை ஆசிரியர் எஸ்.லட்சுமி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

### எஞ்சிய விவசாய நிலங்களைப் பாதுகாப்பது அவசியம்

First Published : 02 Feb 2010 04:50:57 AM IST

புதுக்கோட்டை, பிப். 1: விவசாய நிலங்கள் அழிந்து வரும் நிலையில், எஞ்சிய நிலங்களையாவது காப்பாற்றுவது அவசியமாகிறது. இல்லையெனில், உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் ஆ. சுகந்தி.

மேலும், மற்றவர்களைப் பற்றி கவலைப்படும் ஒரே இனமாக விவசாயிகள் இனம் திகழ்கிறது என்றும் அவர் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

புதுக்கோட்டையில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ஆத்மா) விரிவாக்க சீரமைப்புத் திட்டம் மூலம் அய்யா திருமண மாளிகையில் திங்கள்கிழமை நடைபெற்ற ராபி பருவ சிறப்பு முனைப்பு இயக்க கண்காட்சி மற்றும் கருத்தரங்கை தொடக்கிவைத்து, 11 பயனாளிகளுக்கு ரூ. 5.5 லட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை அளித்து மேலும் அவர் பேசியது:

விவசாயத்தில் கிடைக்கும் பலன், விவசாயத்தில் ஏற்படும் பிரச்னைகள், அதை சமாளிக்கும் விதம், விவசாயத்துக்காக அரசு செயல்படுத்தி வரும் திட்டங்கள் போன்ற அனைத்து விசயங்களையும் இந்தக் கண்காட்சியைப் பார்வையிட்டாலே சுலபமாக புரிந்து கொள்ளலாம். அந்த அளவுக்கு கண்காட்சி சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, 2008-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட வேளா ண் வணிகத் துறை நல்ல முன்னேற்றம் கண்டு வருகிறது. விவசாயம் செய்வதால் மட்டும் பலன் கிடைத்து விடாது. விளைப் பொருள்களை விற்பனை செய்யும் வழிமுறை, சந்தை விவரம் ஆகியன தெரிந்திருக்க வேண்டும். இதுபோன்ற பிரச்னைகளை வேளாண் வணிகத் துறை எளிதில் தீர்த்துவைத்து விவசாயிகளுக்கு உதவி வருவது பாராட்டுக்குரியது.

பசி தணிந்தால் மட்டுமே அறிவு வளரும். மக்கள் பசியின்றி இருந்தால் மட்டுமே நாடு உண்மையான முன்னேற்றம் அடைந்ததாக அர்த்தம். இந்த பசிப்பிணியைப் போக்குவதற்காகத்தான் பல்வேறு இன்னல்களுக்கு இடையே விவசாயிகள் தங்களது கடமைகளையாற்றி வருகின்றனர். மனச் சோர்வின்றி பிறரைப் பற்றிக் கவலைப்படும் ஒரே இனமாக விவசாயிகள் இனம் திகழ்கிறது.

விவசாய நிலப் பரப்பு வெகு வேகமாக சுருங்கி வரும் நிலையில், இன்னும் 10 ஆண்டுகளில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் சூழல் உள்ளது.

ஏற்கெனவே கோதுமையை இறக்குமதி செய்து வரும் நிலையில், அதைத் தொடர்ந்து அரிசி மற்றும் தற்போது பருப்பு வகைகளையும் இறக்குமதி செய்யும் நிலைக்கு இந்தியா வந்து விட்டது. எனவே, எஞ்சியிருக்கும் விவசாய நிலங்களையாவது காப்பாற்ற வேண்டியது காலத்தின் கட்டாயம்.

மேலும், பணப் பயிர்களை சாகுபடி செய்வதைத் தவிர்த்து, உணவுப் பயிர்களுக்கு முக்கியத்துவம் அளிப்பதும் அவசியமாகிறது.

இதை ஊக்குவிக்கும் வகையில்தான் 3 நாள்கள் இந்தக் கண்காட்சி- கருத்தரங்கு நடைபெறவுள்ளது. இதை விவசாயிகள் பயன்படுத்தி விழிப்புணர்வு பெற வேண்டும் என்றார் ஆட்சியர் சுகந்தி.

தொடக்க விழா நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சித் தலைவர் சி. முத்துச்சாமி, துணை ஆட்சியர் (பயிற்சி) ஆர். மேனகா, நகர்மன்றத் தலைவர் உ. ராமதிலகம், மாவட்ட ஊராட்சி துணைத் தலைவர் த. சந்திரசேகரன், நகர்மன்ற உறுப்பினர் ஏ.எம்.எஸ். இப்ராஹிம்பாபு, கறம்பக்குடி ஒன்றியக் குழு உறுப்பினர் பெர்னத்மேரி சூசைராஜ், மணமேல்குடி ஒன்றியக் குழு துணைத் தலைவர் எஸ். எம். சீனியார், கந்தர்வகோட்டை ஒன்றியக் குழுத் தலைவர் பெ. மாரியய்யா, ஆத்மா திட்ட ஆலோசனைக் குழுத் தலைவர் வைக்கோராஜன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கண்காட்சியில் வேளாண் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத் துறை, வேளாண் பொறியியல் துறை, விதை சான்றளிப்புத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வனத் துறை, வம்பன் தேசிய பயறுவகை ஆராய்ச்சி நிலையம், கால்டை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக மண்டல ஆராய்ச்சி நிறுவனம், கூட்டுறவுத் துறை, மீன்

வளர்ச்சித் துறை, தாட்கோ, பொதுப் பணித் துறை, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கம் உள்பட பல்வேறு துறைகளைச் சேர்ந்த 34 அரங்குகள் அமைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக, ஆத்மா திட்ட இயக்குநர் பா. கிருஷ்ணசாமி வரவேற்றார். வேளாண்மை துணை இயக்குநர் ப. ராஜு நன்றி கூறினார்.

**புகையான் தாக்கிய நெல் பயிர்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும்**
First Published : 02 Feb 2010 04:50:15 AM IST

அறந்தாங்கி பிப். 1: புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவில் பகுதியில் புகையான் நோய் தாக்கிய நெல் பயிர்களுக்கு இழப்பீடு வழங்கக் கோரி ஒன்றியக் குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

ஆவுடையார்கோவில் ஒன்றியக் குழுவின் சாதாரணக் கூட்டம் அதன் தலைவர் என். ராஜேஸ்வரி நரேந்திரஜோதி தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது. ஒன்றிய ஆணையர் பி. பிரபாகர் திருக்குறள் வாசித்து கூட்டத்தைத் தொடக்கிவைத்தார். துணைத் தலைவர் கே.கே.சி. ராமநாதன் முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் நடைபெற்ற விவாத விவரம்:

பி. பாலபூமி (தேமுதிக) : எனது வார்டு பகுதியில் நெல் பயிர்களை புகையான் நோய்த் தாக்கியுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மு. ராஜநாயகம் (அதிமுக): இந்த நோய் பாதிப்பு ஆவுடையார்கோவில் வட்டத்தில் முழுவதும் உள்ளது. எனவே, இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியருக்குக் கருத்துரு அனுப்பி, விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தலைவர்: உறுப்பினர்களின் கோரிக்கைகளை தீர்மானமாக நிறைவேற்றி, மாவட்ட ஆட்சியர், வேளாண் துறை அலுவலர்களிடம் அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பி. பாலபூமி: புண்ணியவயல் கிராமத்தில் மின் கம்பங்கள் அமைத்துத் தருவதாக மின் வாரிய அலுவலர் அளித்த உத்திரவாதம் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

எஸ். குணநாயகம் (மின் வாரிய உதவிப் பொறியாளர்): வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கு சிறப்புத் திட்டத்தின் கீழ் மின் கம்பங்கள் அமைக்கும் பணி தற்போது நடைபெற்று வருவதால் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்த மாத இறுதிக்குள் மின் கம்பங்கள் அமைத்துத் தரப்படும்.

மு. ராஜநாயகம்: பூங்குடி கிராமத்தில் குறைந்த மின் அழுத்தம் காரணமாக மின் விளக்குகள் சரியாக எரிவதில்லை. மின் மாற்றியை விரைவாக சீரமைக்க வேண்டும்.

எஸ். குணநாயகம்: இந்த பிரச்னை விரைவில் சீரமைக்கப்படும்.

அ. ரசூல்கான் (தேமுதிக): நாட்டாணிபுரசக்குடி ஊராட்சியில் எந்தத் தகவலும் உறுப்பினருக்குத் தெரியப்படுத்துவதில்லை. கிராம சபைக் கூட்டங்களுக்குக்கூட அழைப்பிதழ் இல்லை. இதை ஒழுங்குபடுத்த வேண்டும்.

ஆணையர் : இனிவரும் கூட்டங்களுக்கு கண்டிப்பாக உறுப்பினரை அழைக்க வேண்டும் என்று ஊராட்சி மன்றத் தலைவருக்கு அறிவுறுத்தப்படும்.

தலைவர் : இதுதொடர்பாக ஊராட்சி மன்றத் தலைவர்கள் கூட்டத்தில் பேசி, நடவடிக்கை எடுக்கப்படும்.

அதைத்தொடர்ந்து, கூட்டத்தில் வைக்கப்பட்ட அனைத்துத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் து. பாஸ்கர், எஸ். சண்முகம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ச. புவனேஸ்வரன், பொறியாளர்கள் கருப்பையா, சேது மற்றும் ஒன்றியக் குழு உறுப்பினர்கள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## இழப்பீடு கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

First Published : 02 Feb 2010 04:49:41 AM IST

அறந்தாங்கி பிப். 1: புதுக்கோட்டை மாவட்டம், ஆவுடையார்கோவிலில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தினர் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் ஆவுடையார்கோவில் வட்டம் சார்பில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்துக்கு, சங்க வட்டத் தலைவர் எஸ். காசி தலைமை வகித்தார். செயலர் எம்.எஸ். கலந்தர் முன்னிலை வகித்தார்.

ஆவுடையார்கோவில் பகுதியில் புகையான், வைரஸ், குழை போன்ற நோய்த் தாக்குதல்களால் நெல் பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால், விவசாயிகளுக்கு பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் மத்திய, மாநில அரசுகள் இழப்பீடு வழங்க வேண்டும் என்று ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

மத்திய தொழில்சங்க மாவட்டச் செயலர் க. செல்வராஜ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் வட்டச் செயலர் சி. சுப்பிரமணியன், விவசாயத் தொழில்சங்க நிர்வாகி வே. வீரையா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

ஒன்றிய குழு உறுப்பினர்கள் அ. வைரமணி, எஸ். முத்துமாணிக்கம், பி. சின்னச்சாமி, எஸ். சபரிநாதன், கே. சுப்பிரமணியன், கே. மாரிமுத்து உள்பட பலர் கலந்து கொண்டனர். சங்கத்தின் வட்டப் பொருளாளர் வி. கணேசன் நன்றி கூறினார்.

## கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் இரண்டாம் போகத்திற்கு முறைப்பாசனம் அமல்படுத்த நடவடிக்கை

First Published : 01 Feb 2010 05:33:43 AM IST
Last Updated : 01 Feb 2010 10:19:41 AM IST

கம்பம், ஜன. 31: தேனி மாவட்டம், கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் நெல் 2-ம் போகத்திற்கான தண்ணீர் பற்றாக்குறையைப் போக்க, முறைப்பாசனம் அமல்படுத்த மாவட்ட ஆட்சியர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் கூடலூர் முதல் வீரபாண்டி வரை பெரியாற்று பாசனத்தின் கீழ் 14,707 ஏக்கரில் இரண்டாம் போகம் நெல் பயிரிடப்பட்டுள்ளது. கூடலூர், வெட்டுகாடுப் பகுதியில் நெல் நாத்துகள் நட்டு 60 நாள்கள் ஆகியுள்ள நிலையிலும், கூடலூர் ஒட்டன்குளம், கப்பாமடை, உத்தமபாளையம் பகுதிகளில் நாத்துகள் நட்டு 30 நாள்களே ஆகியுள்ளன.

இரண்டாம்போகத்திற்கு 120 நாள்கள் தண்ணீர் தேவையுள்ளது. பெரியாறு அணையில் தற்போது நீரின் அளவு 114.20 அடியாக உள்ளது. அணைக்கு நீர் வரத்து விநாடிக்கு 8 கனஅடியாக உள்ளது. பெரியாறு அணையிலிருந்து, சனிக்கிழமை வரை தமிழகத்துக்கு விநாடிக்கு 838 கனஅடி தண்ணீர் பாசனத்திற்கும், குடிநீருக்கும் திறந்து விடப்பட்டு வந்தது. அணையில் மொத்த நீர் இருப்பு 1,593 மில்லியன் கனஅடியாக உள்ளது.

இதனால், பெரியாறு அணையின் நீர்மட்டம் 114 அடியாக இருந்தாலும், அணையிலிருந்து தமிழகத்திற்கு 109 அடி வரை மட்டுமே தண்ணீரை எடுக்கும் நிலையுள்ளது. எனவே, 120 நாள்களுக்கு 5 அடி தண்ணீர் மட்டுமே கையிருப்பாக உள்ளதால், இரண்டாம் போகத்திற்கு தண்ணீர் பற்றக்குறை ஏற்பட்டுள்ளது. இதனால், கம்பம் பள்ளத்தாக்குப் பகுதியில் 2-ம் போகத்திற்கு முறைப்பாசனம் அமல்படுத்த மாவட்ட ஆட்சியரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 31-ம் தேதி முதல், பெரியாறு அணையிலிருந்து குடிநீருக்கும், பாசனத்துக்கும் விநாடிக்கு 400 கனஅடி தண்ணீர் மட்டுமே திறந்துவிடப்படுகிறது. எனவே, கம்பம் பள்ளத்தாக்குப் பகுதி விவசாயிகள் தண்ணீரை முறையாகவும், சிக்கனமாகவும் பயன்படுத்துமாறு, மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித்துறையும் கேட்டுக்கொண்டுள்ளன.

**பாசனத்திற்கு தடையாக இருக்கும் அமலைச் செடிகள்**
First Published : 02 Feb 2010 01:54:34 AM IST

அம்பாசமுத்திரம், பிப். 1: அம்பாசமுத்திரம் பகுதியில் பாசனக் கால்வாய்களில் வளர்ந்துள்ள அமலைச் செடிகள், காட்டாமணக்கு செடிகளால் தண்ணீர் கிடைப்பதில் தடை உள்ளது. எனவே, கால்வாய்களை தூர்வார வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாபநாசம் அணையின் மூலம் அம்பாசமுத்திரம் வட்டத்தில் வடக்கு மற்றும் தெற்கு கோடைமேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய், கன்னடியன் கால்வாய், கோடகன் கால்வாய் மூலம் 24,100 ஏக்கர் நிலங்கள் பாசனவசதி பெறுகின்றன. இக் கால்வாய்களில் வளர்ந்து காணப்படும் அமலைச் செடிகள், காட்டாமணக்கு செடிகளால் பாசனத்திற்கு தண்ணீர் கிடைப்பதில் தாமதம் ஏற்படுவதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

அம்பாசமுத்திரம் வட்டத்தில் விவசாயம் பிரதானமாக உள்ளது. கால்வாய்கள் போதிய பராமரிப்பு இல்லாமல் பாசனத்திற்கு தேவையான தண்ணீர் வழங்க முடியாத நிலை உள்ளது. கால்வாய்களைச் சீரமைக்க அரசு தேவையான நிதி ஒதுக்கீடு செய்யாத காரணத்தால் முழு அளவில் கால்வாய்கள் பராமரிக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. பாசனத்திற்கு தண்ணீர் தடையின்றி வழங்கும் வகையில் கால்வாய்களில் சிமெண்ட் தளம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

முதல் கட்டமாக கன்னடியன் கால்வாயில் ரூ. 18 கோடி மதிப்பில் சிமெண்ட் தளம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், அத் திட்டம் முழுமையாக செயல்படுத்தப்படவில்லை. இந் நிலையில் வடக்கு மற்றும் தெற்கு கோடை மேலழகியான் கால்வாய், நதியுன்னி கால்வாய்களில் அதிக அளவில் அமலைச் செடிகள் வளர்ந்து காணப்படுகிறது. இதனால், கடைசி மடைக்கும் தேவையான தண்ணீர் கிடைக்கவில்லை என விவசாயிகள் புகார் கூறினர்.

வரும் ஏப்ரல், மே மாதங்களில் இக் கால்வாய்களில் வளர்ந்துள்ள அமலைச் செடிகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றார் மூன்று கால்வாய் நீர்பாசன சங்க தலைவர் இரா. சிவகுருநாதன்.

## நிலக் கடனில் ரூ. 50 லட்சத்தை அரசுக்குத் திருப்பி செலுத்தத் திட்டம்

First Published : 02 Feb 2010 05:01:14 AM IST

நாகப்பட்டினம், பிப். 1: லாப்டி பருவ கால நிலக்கடனில் ரூ. 50 லட்சத்தை நிகழாண்டில் அரசுக்குத் திருப்பி செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது என்றார் லாப்டி மேலாளர் வெங்கோபு.

நாகை மாவட்டம், கீழ்வேளூர் கூத்தூரில் உள்ள (லாப்டி) உழவனின் நில உரிமை இயக்கம் சார்பில், நிலமற்ற பெண்களுக்குக் கடனில் நிலம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி, தலைஞாயிறு பகுதியில் இதுவரை 842 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

ஓரடியம்பலம் பகுதியில் லாப்டி மூலம் நிலம் பெற்று, கடன் தொகையைத் திருப்பி செலுத்தியவர்களுக்கு நிலப் பட்டா வழங்கும் நிகழ்ச்சி ஓரடியம்பலத்தில் அண்மையில் நடைபெற்றது. கிராம பிரமுகர் ராசமாணிக்கம் தலைமை வகித்தார்.

லாப்டி மேலாளர் வெங்கோபு சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்று, நிலக்கடன்களைத் திருப்பி செலுத்தியவர்களுக்கு நிலப்பட்டா மற்றும் பரிசுப் பொருள்களை வழங்கிப் பேசுகையில், லாப்டியின் பருவகால நிலக்கடனில் ரூ. 50 லட்சத்தை தமிழக அரசுக்குத் திருப்பி செலுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மார்ச் 3-ம் தேதி திருச்சியில் நடைபெறும் தமிழக அரசின் வீடு கட்டும் திட்ட தொடக்க விழாவில் இத்தொகை செலுத்தப்படும் என்றார்.

லாப்டி பொறுப்பாளர்கள் சுப்பிரமணியன், மூ. அருள், செல்வராசு, த. ஜெகதீசன், செராஜெம் முனியன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## நெற்பயிரில் நோய்த் தாக்குதல்: 1000 ஏக்கர் விவசாயம் பாதிப்பு

First Published : 02 Feb 2010 01:59:08 AM IST

ராமநாதபுரம்,பிப்.1: ராமநாதபுரம் மாவட்டத்துக்குள்பட்ட பல்வேறு கிராமங்களில் நெற்பயிர்களில் நோய்த் தாக்கி சுமார் 1000 ஏக்கர் விவசாயம் பாதிக்கப்பட்டிருப்பதாக விவசாயிகள் ஆட்சியரிடம் புகார் செய்தனர்.

ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் திங்கள்கிழமை நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் நயினார்கோயில் ஒன்றியம் பொட்டகவயல்,

நெடுந்துளசி, உகமை, திருவாடானை தாலுகா மணக்குடி ஊராட்சி கண்ணரேந்தல் கிஉள்பட பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் நோய்தாக்கிய நெற்பயிர்களுடன் கூட்டத்துக்கு வந்து ஆட்சியரிடம் புகார் செய்தனர். பின்னர் அவர்கள் கூறியதாவது:

இந்நோய் தாக்குதல் பற்றி வேளாண்மைத்துறை அதிகாரிகளிடம் முறையிட்டும் எந்த பலனும் இல்லை. விவசாயிகளை அதிகாரிகள் தொடர்ந்து அலைய விட்டார்களே தவிர எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

கைத்தெளிப்பான், விசைத்தெளிப்பான் தருமாறு கேட்டால் மார்ச் மாதம் தான் தருவோம் என்று தெரிவிக்கின்றனர்.

நெற்பயிர் நோய்த் தாக்குதலால் ஏராளமான கிராமங்களில் விவசாயம் சுமார் 1000 ஏக்கருக்கு மேல் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

## ராமநாதபுரத்தில் விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

First Published : 02 Feb 2010 01:58:54 AM IST

ராமநாதபுரம், பிப். 1: ராமநாதபுரத்தில், நெற்பயிர்களில் புகையான் மற்றும் நெற்பழம் நோய் தாக்கியதால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரி தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் வட்டச் செயலாளர் எஸ்.பி.பூமிநாதன் தலைமைவகித்தார்.

மாநிலத் தலைவர் கே.பாலகிருஷ்ணன் ஆர்ப்பாட்டத்தைத் துவக்கி வைத்து பேசினார். மாவட்டச் செயலாளர் எம்.முத்துராமு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் வட்டச் செயலாளர் எம்.ராஜ்குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விவசாயத் தொழிலாளர் சங்கத்தின் மாவட்டச் செயலாளர் என். கலையரசன், வட்டத் தலைவர் குப்புச்சாமி உள்பட பலர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினார். ஆர்ப்பாட்டத்தில் விவசாயிகள் நோய்த் தாக்கிய நெற்பயிர்களுடன் திரளாகப் பங்கேற்றனர்.

## மேட்டூர் அணை திறப்பதில் தாமதம் : உளுந்து சாகுபடி பாதிப்பு

நமது நிருபர்

First Published : 02 Feb 2010 12:12:35 AM IST

Last Updated : 02 Feb 2010 02:19:28 AM IST

கடலூர், பிப்.1: இந்த ஆண்டு மேட்டூர் அணையில் போதிய தண்ணீர் இருந்தும், உரிய நேரத்தில் பாசனத்துக்குத் திறக்காததால், காவிரி டெல்டா மாவட்டங்களில் உளுந்து சாகுபடி பாதிக்கப்பட்டு உள்ளது.

கர்நாடக மாநிலத்துடன் காவிரி நீர்ப் பிரச்னை தொடங்கிய காலம் முதல் தமிழகத்தில் 11 டெல்டா மாவட்டங்களில் குறுவை நெல் சாகுபடி முற்றிலும் நின்று போயிற்று.

16 லட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடியும், பல ஆண்டுகள் விவசாயிகளுக்கு நம்பிக்கை அற்ற நிலையையே ஏற்படுத்தி இருக்கிறது.

காவிரிப் பிரச்னை தொடங்குவதற்கு முன் ஜூன் 12-ல் மேட்டூர் அணைத் திறக்கப்பட்டு வந்தது. இதனால் தமிழக டெல்டா மாவட்டங்களில் சம்பா அறுவடைக்குப் பின்னர் வரும் உளுந்து மகசூல் செலவில்லாமல் கிடைக்கும் போனஸôகக் கருதப்பட்டு வந்தது.இந்த ஆண்டு ஜூன், ஜூலை மாதங்களில் மேட்டூர் அணை நீர்மட்டம் 70 அடிக்கு மேல் இருந்தும் பாசனத்துக்குக் திறக்கப்படவில்லை.காலம் கடந்து திறக்கப்பட்டதன் விளைவாக செப்டம்பர் கடைசி வாரத்தில்தான் கடலூர் உள்ளிட்ட மாவட்டங்களுக்குக் காவிரி நீர் கிடைத்தது.சம்பா அறுவடைக்கு 10 நாள்களுக்கு முன் (ஜனவரி முதல் வாரத்தில்) வயலில் உளுந்து விதைத்து விடுவார்கள். வயலில் உள்ள ஈரம் மற்றும் பனியால் வளர்ந்து, பிப்ரவரி கடைசியில் தென்றல் காற்று வீசத் தொடங்கியதும் பூத்துக் காய் பிடிக்கும். ஆனால் இந்த ஆண்டு அறுவடை தொடங்கியே 10 நாள்கள்தான் ஆகிறது. கடலூர் மாவட்டத்தில் மானாவாரி, இறவை உள்ளிட்ட சுமார் 1.60 லட்சம் ஏக்கரில் உளுந்து பயிரிடப்பட்டு வந்தது. இந்த ஆண்டு உளுந்து விதைப்பு குறைந்து விட்டது.இதனால் பெருவாரியாகப் பயன்படுத்தும் ஏடிடி 9 உளுந்து விதை விவசாயிகளிடம் கையிருப்பு இல்லை. எனவே இந்த ஆண்டு டெல்டா மாவட்டங்களில் உளுந்து உற்பத்தி பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இது குறித்து விவசாயச் சங்கங்களின் கூட்டமைப்பின் கடலூர் மாவட்ட அமைப்பாளர் பி.ரவீந்திரன் கூறுகையில், தமிழகத்தில் இந்த ஆண்டு 9 லட்சம் டன் உளுந்து உள்ளிட்ட பயறுவகைகள் உற்பத்திக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.ஆனால் 6 லட்சம் டன் உற்பத்தியாவதே பெரிய விஷயம் என்று வேளாண் துறை தெரிவிக்கிறது. உளுந்து விதைக்கும் காலம் ஜனவரி கடைசி வாரத்தில் முடிந்து விட்டது.

கடலூர் மாவட்டத்தின் உளுந்துவிதை தேவை 110 டன். ஆனால் காலம் கடந்து தற்போது 50 டன் டி.ஐ. 9 உளுந்தை தருவித்து இருக்கிறது வேளாண் துறை.இதன் விலை மானியம் போக கிலோ ரூ. 90. வெளிச் சந்தையில் ரூ. 70-க்குக் கிடைக்கிறது. காலம் கடந்து விட்டதால், கிலோ ரூ. 90 விலை கொடுத்து வாங்கி விதைக்க, விவசாயிகள் தயக்கம் காட்டுகிறார்கள்.

இயந்திரங்களைக் கொண்டு அறுவடை செய்வதால் விதைத்து இருக்கும் உளுந்து பாதிக்கப்படுகிறது. இத்தகைய நேரங்களில், மேட்டூர் அணையில் இருந்து உளுந்துக்கு இரு முறை பாய்ச்சுவதற்குக் தண்ணீர் கொடுத்தால் நலமாக இருக்கும் என்றார்.இது குறித்து கடலூர் வேளாண் இணை இயக்குநர் இளங்கோவனிடம் கேட்டதற்கு தமிழகத்தில் இந்த ஆண்டு 4 லட்சம் டன் உளுந்து உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.கடலூர் மாவட்டத்தில் 30 ஆயிரம் ஹெக்டேரில் உளுந்து பயிரிடப்பட்டு இருக்கிறது. பலர் சம்பா அறுவடைக்குப் பின் உளுந்து விதைத்து இருக்கிறார்கள் என்றார்.

## இந்திய ஏற்றுமதி 9.3%

First Published : 02 Feb 2010 12:00:00 AM IST

புது தில்லி, பிப்.1: இந்திய ஏற்றுமதி தொடர்ந்து இரண்டாவது மாதமாக டிசம்பரில் அதிகரித்துள்ளது. சர்வதேச தேக்க நிலையிலிருந்து பொருளாதாரம் மீட்சியடைந்து வருவதன் எதிரொலியாக ஏற்றுமதி உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்திய ஏற்றுமதி 9.3 சதவீதம் உயர்ந்து மொத்தம் 1,400 கோடி டாலருக்கு (ரூ. 68,000 கோடி) ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டு இதேகாலத்தில் நாட்டின் ஏற்றுமதி 1,336 கோடி டாலராக இருந்தது.

தொடர்ந்து 11 மாதங்களாக சரிவில் இருந்த இறக்குமதியும் சற்று அதிகரித்து 2,475 கோடி டாலராக உயர்ந்தது. முந்தைய ஆண்டு இதேகாலத்தில் இறக்குமதி 1,945 கோடி டாலராக இருந்தது. பற்றாக்குறை 1,014 கோடி டாலராகும். முந்தைய ஆண்டு இதேகாலத்தில் பற்றாக்குறை 600 கோடி டாலராக இருந்தது.

கடந்த நவம்பரில் ஏற்றுமதி 18.2 சதவீதம் உயர்ந்தது. தற்போது சர்வதேச அளவில் நிலவி வந்த தேக்க நிலை சீரடைந்து வருவதையே இது காட்டுகிறது என்று ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்துக்கான இந்திய மையத்தின் தலைவர் ராகேஷ் மோகன் ஜோஷி தெரிவித்தார்.

நடப்பு நிதி ஆண்டில் ஏப்ரல் முதல் டிசம்பர் வரையான காலத்தில் ஏற்றுமதியில் 20 சதவீதம் வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. தற்போதைய வளர்ச்சி தொடரும்பட்சத்தில் நடப்பு நிதி ஆண்டின் இறுதியில் ஏற்றுமதி சரிவு 5 சதவீதமாகக் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இருப்பினும் 2010-11-ம் நிதி ஆண்டில் ஏற்றுமதி 10 சதவீத வளர்ச்சியை எட்டும் என்று ஹெச்டிஎப்சி வங்கியின் தலைமை பொருளாதார நிபுணர் ஜோதிந்தர் கெப்ர் கூறினார்.

பெட்ரோல், டீசல் இறக்குமதி 42 சதவீதம் அதிகரித்துள்ளது. மொத்தம் 653 கோடி டாலர் மதிப்புக்கு கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டு இதேகாலத்தில் கச்சா எண்ணெய் இறக்குமதிக்கு செலவிட்ட தொகை 457 கோடி டாலராகும்.

டிசம்பருடன் முடிவடைந்த 9 மாதங்களில் 5,691 கோடி டாலர் கச்சா எண்ணெய் இறக்குமதிக்குச் செலவிடப்பட்டுள்ளது. எண்ணெய் அல்லாத பொருள் இறக்குமதி 22 சதவீதம் உயர்ந்து 1,821 கோடி டாலராக உயர்ந்துள்ளது.

### தரமற்ற விதைகளால் 700 ஏக்கர் பருத்தி பாதிப்பு: விவசாயிகள் புகார்

First Published : 02 Feb 2010 05:39:45 AM IST

தருமபுரி, பிப். 1:பாப்பிரெட்டிப்பட்டி அருகே தரமற்ற பருத்தி விதைகளை பயன்படுத்தி 700 ஏக்கரில் சாகுபடி செய்யப்பட்ட பருத்தி கருகி பெரும் பாதிப்புக்கு ஆளாகியுள்ளதாக தருமபுரி ஆட்சியரிடம் பாதிக்கப்பட்ட விவசாயிகள் புகார் மனு அளித்தனர்.

ஆட்சியர் பெ. அமுதாவை திங்கள்கிழமை சந்தித்த அவர்கள், தரமற்ற பருத்தி விதைகளை விற்பனை செய்யும் தனியார் உரக் கடைகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்தனர்.

பாப்பிரெட்டிப்பட்டி அருகேயுள்ள கொளகம்பட்டி, வாழைத் தோட்டம், எருகம்பட்டி உள்ளிட்ட 10-க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் பி.டி.-ரக பருத்தி விதைகளை தனியார் உரக்கடைகளில் வாங்கி பயிரிட்டதாகவும், அவை அறுவடை நேரத்தில் கருகியுள்ளதாகவும், இதனால் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் வரை இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் கூறினர்.

### ஒற்றைச் சாளர முறைப்படி முட்டைக் கோழிகள் விற்பனை

First Published : 02 Feb 2010 12:24:10 AM IST

நாமக்கல், பிப். 1: கேரளத்துக்கு கறிக்காக அனுப்பபடும் முட்டைக் கோழிகளை ஒற்றைச் சாளர முறைப்படி விற்பனை செய்வது என தேசிய முட்டை ஒருங்கிணைப்புக்குழு (என்இசிசி) அறிவித்துள்ளது.

நாமக்கல் மண்டலத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முட்டைக் கோழி பண்ணைகள் உள்ளன. இங்கு 3.50 கோடி முட்டைக் கோழிகள் வளர்க்கப்படுகின்றன. முட்டையிடும் தன்மை முடியும் இறுதிக்கட்டத்தில் இத்தகைய கோழிகளை இறைச்சிக்காக விற்பனை செய்வது வழக்கம். குறிப்பாக கேரள மாநிலத்துக்கு பெருமளவில் முட்டைக் கோழிகள் அனுப்பப்படுகின்றன. வயது முதிர்ந்த இக் கோழிகளை கொள்முதல் செய்யும் வியாபாரிகள் மிகவும் விலை குறைத்து கொள்முதல் செய்கின்றனர். ஆனால், கேரளத்துக்கு விற்பனை செய்யும்போது கூடுதல் விலைக்கு விற்பனை செய்கின்றனர் என்ற புகார் நீண்ட நாட்களாக இருந்து வந்தது. இதற்கு தீர்வு காணும் வகையில் வரும் காலங்களில் ஒற்றைச் சாளர முறைப்படியில் முட்டைக் கோழிகளை விற்பனை செய்ய என்இசிசி முடிவு செய்துள்ளது.

இது தொடர்பாக, நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு தலைவர் டாக்டர் பி. செல்வராஜ் கூறியது:

முட்டைக் கோழி விற்பனையை ஒழுங்குபடுத்துவதற்காக கோழிப் பண்ணையாளர்கள், வியாபாரிகளுடன் அண்ணையில் கலந்தாலோசனை நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, இறைச்சிக்காக விற்பனை செய்யப்படும் வயது முதிர்ந்த முட்டைக் கோழிகளை ஒற்றைச் சாளர முறைப்படி விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. கோழிப் பண்ணையாளர்கள் தங்களிடம் உள்ள வயது முதிர்ந்த முட்டைக் கோழிகள் குறித்த தகவலை சங்கத்துக்கு தெரிவித்து சங்கத்தின் மூலம் அனுப்பப்படும் வாகனங்களில் முட்டைக் கோழிகளை விற்பனை செய்ய வேண்டும். ராசிபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் நாமக்கல்

மண்டல முட்டை உற்பத்தியாளர்கள் சங்கத்திலும், நாமக்கல் பகுதியைச் சேர்ந்த தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் சங்கத்திலும் தகவல் தெரிவிக்கலாம். சங்கத்தின் மூலம் விலை குறிப்பிட்டு கடிதம் கொண்டுவரும் வாகனங்களில் மட்டும் கோழிகளை ஏற்ற வேண்டும். இதனைக் கண்காணிக்க ஏ.கே.பி.சின்னராஜ், கே.எஸ். பொன்னுசாமி ஆகியோர் ஒருங்கிணைப்பாளர்களாக நியமிக்கப்பபடடுள்ளனர்.

நாமக்கல் மண்டலத்தைச் சேர்ந்த பண்ணையாளர்கள் அனைவரும் இந்த நடைமுறையை தவறாமல் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

தினமலர்

**தமிழகத்தில் தேங்காய், கொப்பரை விலை திடீர் உயர்வு**

பிப்ரவரி 02,2010,02:40



பொள்ளாச்சி: தேங்காய், கொப்பரை போன்றவற்றின் விலை கிடுகிடுவென உயர்ந்து, ஒட்டுமொத்த தேங்காய் மார்க்கெட் சூடுபிடித்திருப்பதால், தென்னை விவசாயிகள் மற்றும் கொப்பரை உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். உலக தென்னை சாகுபடியில், இந்தியாவில் 20 சதவீதம் உள்ளது. இதில், கேரள மாநிலத்தில் ஒன்பது லட்சம் எக்டேர் தென்னை சாகுபடி உள்ளது. தமிழகத்தில் ஆறு லட்சம் எக்டேரிலும், கர்நாடகாவில் 4.25 லட்சம் எக்டேரிலும், ஆந்திராவில் 1.25 லட்சம் எக்டேரிலும் தென்னை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.
இதில், தென்னை சாகுபடியில் தமிழகம் இரண்டாவது இடத்தில் இருந்தாலும், தேங்காய் உற்பத்தி திறனில் முதலிடத்தில் உள்ளது. கோவை மாவட்டத்தில் 50 சதவீதமும், ஈரோடு 20 சதவீதமும், மற்ற மாவட்டங்களில் 30 சதவீதமும் உள்ளது. தேங்காயில் 60 சதவீதம் கொப்பரையாக மாற்றப்படுகிறது. உணவு தேவைக்காக 30 சதவீதமும், தேங்காய் பவுடர் மற்றும் தேங்காய் பால் தேவைக்காக 10 சதவீதம் தேங்காய் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் ஆண்டுக்கு சராசரியாக 1,400 கோடி தேங்காய் உற்பத்தியாகிறது. உணவு தேவைக்கும், மதிப்புக் கூட்டப்பட்ட பொருளாகவும் மாற்றி விற்பனை செய்யும்போது, ஆண்டுக்கு சராசரியாக 3,600 கோடி ரூபாய் வர்த்தகம் நடக்கிறது. ஈரோடு மாவட்டத்தில் அவல்பூந்துறை மார்க்கெட்டிங் கமிட்டி மூலம் கொப்பரை ஏலம் நடத்தப்படுகிறது. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள காங்கேயம் சந்தையில் தினமும் கொப்பரை ஏலம் நடத்தப்பட்டு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. காங்கேயம் மார்க்கெட் நிலவரத்தை பொறுத்து மாநிலம் முழுவதும் தேங்காய், தேங்காய் எண்ணெய், கொப்பரைக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.

தமிழகத்தில் பிப்., முதல் ஆகஸ்ட் மாதம் வரையில் தேங்காய் சீசன் நீடிக்கிறது. அதன்பின், தேங்காய் வரத்து குறைந்து விடுகிறது. கடந்தாண்டு வரத்து அதிகமாக இருந்தாலும், தேங்காய் சார்ந்த பொருட்கள் விலை குறையவில்லை. தேங்காய் சீசன் காலத்தில் கொப்பரை கிலோவுக்கு குறைந்தபட்சமாக 30 ரூபாயும், சீசன் இல்லாத காலத்தில் கிலோவுக்கு 42 ரூபாயும் விலை கிடைத்தது. ஆனால், இந்தாண்டு சமையல் எண்ணெய் இறக்குமதி, தேங்காய் எண்ணெயில் கலப்படம், வெளிமார்க்கெட்டில் சிண்டிகேட் காரணமாக தேங்காய் சார்ந்த பொருட்கள் விலை சரிந்தன. தேங்காய் சீசன் காலத்தில் கொப்பரை கிலோவுக்கு 25 ரூபாயும், சீசன் இல்லாத காலத்தில் 34

ரூபாய்க்கும் விற்றது. கடந்த மாதம் கொப்பரை விலை கிலோவுக்கு அதிகபட்சமாக 33 ரூபாய் மட்டுமே விலை கிடைத்தது. ஜன., 30ம் தேதி முதல் கொப்பரை மார்க்கெட் சூடுபிடித்துள்ளது.

கொப்பரை கிலோவுக்கு 36 ரூபாயும், தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின் 760 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 52 ரூபாயும், தென்னந்தோப்புகளில் ஒரு தேங்காய் (பச்சை) 5.20 ரூபாயும், காய்ந்தது 6.40 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. காய்ந்த தேங்காய் ஒரு டன்னுக்கு 11,400 ரூபாயும், பச்சை தேங்காய் டன்னுக்கு 10,200 ரூபாயும் விலை கிடைத்தது. இரண்டு நாட்களாக விலை இறங்காமல் ஒரே நிலையில் உள்ளது. தேங்காய் சீசன் துவங்கும் நிலையில், ஒட்டுமொத்த தேங்காய் மார்க்கெட்டும் சூடுபிடித்துள்ளதால் தென்னை விவசாயிகள், கொப்பரை உற்பத்தியாளர்கள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

**திடக்கழிவு மேலாண்மை திட்டம்: இயந்திரம் பயன்படுத்த பேரூராட்சி முடிவு**

சோழிங்கநல்லூர்: சோழிங்கநல்லூர் பேரூராட்சியில் மாவட்டத் திலேயே முதல் முறையாக திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் குப்பை சேகரிக்கும் பணியில் இயந்திரம் பயன்படுத்தப்படவுள்ளது.

சோழிங்கநல்லூர் பேரூராட்சி 15 வார்டுகளையும், 30 ஆயிரம் மக்கள் தொகையையும் கொண்டது. தினசரி 10 டன் குப்பைகள் சேகரமாகின்றன. இப்பேரூராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் "ஹாண்ட் இன் ஹாண்ட்' தொண்டு நிறுவனத்துடன் இணைந்து சிறப்பாக செயல்படுத் தப்பட்டு வருகிறது. குப்பை சேகரிக்கும் பணியில் 56 பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் தினசரி மூன்று சக்கர சைக்கிளில் ஒவ்வொரு பகுதியாக சென்று குப்பைகளை சேகரிக்கின்றனர். பின், திடக்கழிவு மேலாண்மை கிடங்கில் மக்கும் மற்றும் மக்காத குப்பைகள் என தரம் பிரிக்கப்படுகின்றன.

மக்காத குப்பைகள் கைவேலி பகுதியில் கொட்டப்படுகிறது. மக்கும் குப்பைகள் 38 தொட்டிகளில் கொட்டி உரம் தயாரிக்கப்படுகிறது. 20 தொட்டிகளில் மண்புழு உரமும், 18 தொட்டிகளில் மக்கும் உரமும் தயாரிக்கப்படுகிறது. திடக்கழிவு மேலாண்மை கிடங்கை சுற்றி, ஏற்கனவே நடப்பட்டிருந்த செடிகள் அகற்றப் பட்டு, புதியதாக கத்திரி, தக்காளி, வெண்டை, கீரைகள் ஆகிய செடிகள் நடப்படவுள்ளன. இந்நிலையில், இத்திட்டத்தை மேலும் நவீனப்படுத்தும் வகையில் காஞ்சிபுரம் மாவட் டத் திலேயே முதல் முறையாக உரம் தயாரிப்பதற்கு குப்பை கழிவுகளை எருவாக்கும் இயந் திரம் பயன்படுத்தப்படவுள்ளது.

இது குறித்து பேரூராட்சி தலைவர் அரவிந்த் ரமேஷ் கூறுகையில்,"மக்கும் குப்பைகளை தொட்டியில் கொட்டி உரமாக்குவதற்கு 50 நாட்களுக்கு மேல் ஆகிறது. எனவே, குறைந்த நாட்களில் உரம் தயாரிப்பதற்காக இந்த இயந்திரம் பயன்படுத்தப்பட உள்ளது. இந்த இயந்திரத்தின் மதிப்பு ஏழு லட்சம் ரூபாய். இதன் மூலம் தினசரி ஒன்றரை டன் குப்பைகள் அரைக்கப்படும். இதனால், 20 நாட்களிலேயே உரம் தயாராகிவிடும். மேலும், பேரூராட்சியில் மூன்று கோடி ரூபாய் செலவில் நவீன திருமண மண்டபமும் கட்ட முடிவு செய்யப்பட்டுள்ளது' என்றார்.

**மகளிர் குழு பெண்களுக்கு செம்மறி ஆடு வாங்க மானியம்**

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு செம்மறி ஆடுகள் வாங்க மானியம் வழங்கப்பட்டது. ஒரு பஞ்சாயத்து ஒன்றியத்துக்கு உட்பட்ட எட்டு சுய உதவிக்குழுக்களுக்கு ஒரு கிடா மற்றும் 20 பெண் ஆடுகள் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. ஒரு யூனிட்டுக்கு திட்ட மதிப்பீடு 47,200, அதிக அரசு மானியம் 23,600 என எட்டு யூனிட்டுக்கு மொத்தம் மதிப்பீடு 3,776 லட்சம் மானிய தொகை வழங்கப்பட்டுள்ளது.

தர்மபுரி ஒன்றியம் மறுமலர்ச்சி மகளிர் மன்றம், கிருஷ்ணாபுரம், நல்லம்பள்ளி ஒன்றியம் ஒசஅள்ளிபுதூர் மன்றம், பென்னாகரம் ஒன்றியம் புதுமை களஞ்சியம் சுய உதவிக்குழு, அஞ்சல் நத்தம், பாலக்கோடு ஒன்றியம் மாரியம்மன் மகளிர் குழு, காரிமங்கலம் ஒன்றியம் ஜெயம் மகளிர் மன்றம், கொட்டுமார அள்ளி, மொரப்பூர் ஒன்றியம், இளந்தளிர் மகளிர் மன்றம் மடதள்ளி, அரூர் ஒன்றியம் முல்லை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்பட்டது. பாரதிபுரம், கொங்கவேம்பு, பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் அற்புதவிளக்கு மகளிர் மன்றம், விழுதுப்பட்டி, மெணசி ஆகிய மன்றங்களுக்கு கலெக்டர் அமுதா மானிய தொகையை வழங்கினார். கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் பாலசுப்பிரமணியம் மற்றும் கால் நடை உதவி மருத்துவர்கள் ஜெகன்நாதன், ஜெயராமன், சக்திவேல், ராம்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மாவட்ட நிர்வாகம் மீது வழக்கு: விவசாயிகள் சங்கம் தீர்மானம்**

ஈரோடு: "சாயக்கழிவில் இருந்து ஈரோடு மாவட்டத்தை காப்பாற்றத் தவறிய மாவட்ட நிர்வாகம் மற்றும் அதிகாரிகள் மீது உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுப்பது' என, தமிழக விவசாயிகம் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. தமிழக விவசாயிகள் சங்க ஈரோடு மாவட்ட கூட்டம் மாவட்ட தலைவர் குமாரசாமி தலைமையில் நடந்தது. ஈரோடு ஆவின் நிறுவனத்தில் இருந்து பால் உற்பத்தியாளர் சங்கங்களுக்கு தர வேண்டிய பணம் பல வாரங்களாக நிலுவையில் உள்ளது. நிலுவைத் தொகையை "ஆவின்' நிர்வாகம் உடனே வழங்க வேண்டும். '

தரமான கால்நடைத் தீவனங்களை "ஆவின்' வழங்க வேண்டும். ஈரோடு மாவட்டத்தில் நீர்நிலைகளை மாசுபடுத்தும் ஆலைகள் தொடர்பான உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்ற தீர்ப்பை மாவட்ட நிர்வாகமும், மாசுகட்டுப்பாட்டு வாரியமும் அமல்படுத்தவில்லை. எங்கும் சாய, தோல் ஆலைக்கழிவுகளின் கூடாரமாக மாறிவிட்டது. ஈரோடு மாவட்டத்தை காப்பாற்ற தவறிய மாவட்ட நிர்வாகம் மற்றும் அதிகாரிகள் மீது உயர்நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடுப்பது. கறிக்கோழி வளர்ப்புக்கு இலவச மின்சாரத்தில் இருந்து எடுக்கப்படும் தண்ணீரை பயன்படுத்தக்கூடாது என மின்சார வாரியம் கறிக்கோழி வளர்க்கும் விவசாயிகளை எச்சரித்துள்ளது. இதை வன்மையாக கண்டிக்கிறோம். கறிக்கோழி வளர்க்கும் விவசாயிகள் ஏற்கனவே உள்ளது போல், தங்கள் கிணற்று நீரை பயன்படுத்தி கொள்ள அனுமதிக்க வேண்டும் என்பன உள்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**புதிய மஞ்சளை சுத்தமாக கொண்டு வந்தால் அதிக விலை: விவசாயிகளுக்கு கண்காணிப்பாளர் அறிவுரை**

ஈரோடு: ""புதிய மஞ்சளை கல் இல்லாமல் சுத்தமாக விவசாயிகள் கொண்டு வந்தால் அதிக விலை கிடைக்கும்,'' என ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் வேண்டுகோள். ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டுக்கு விவசாயிகள் கொண்டு வரும் மஞ்சள் மறைமுக டெண்டர் மற்றும் "ஆன்லைன்' மூலம் விற்பனை செய்யப்படுகிறது. மஞ்சள் மார்க்கெட்டில் நாளொன்றுக்கு கோடிக்கணக்கான ரூபாய்க்கு வர்த்தகம் நடக்கிறது. 2009ல் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 13 ஆயிரம் வரை உயர்ந்து சாதனை படைத்தது.

மஞ்சள் விலை ஏற்றம் அனைத்து தரப்பினரையும் வியப்பில் ஆழ்த்தியது. இதன் காரணமாக மாவட்டம் முழுவதும் மஞ்சள் சாகுபடி பரப்பளவு அதிகரித்தது. "ஆன்-லைன்' வர்த்தகமே இந்த விலையேற்றத்துக்கு காரணம் என வியாபாரிகள் கருத்து தெரிவித்தனர். சென்ற நவம்பர் மாதம் கடைசி வாரத்தில் மஞ்சள் விலையில் சரிவு ஏற்பட்டது. டிசம்பர் மாதம் துவங்கி ஓரிரு நாட்களே ஆன நிலையில் மஞ்சள் விலையில் மீண்டும் திடீர் சரிவு ஏற்பட்டது. 2009 டிசம்பர் மாதம் கடைசி நாளான 31ல் ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் குவிண்டாலுக்கு அதிகபட்ச விலையாக 11 ஆயிரத்து 400 வரை விலை போனது. புத்தாண்டில் மஞ்சள் விலையில் ஏற்ற, இறக்கமாக உள்ளது. பத்துநாட்களாக அறுவடையான புதிய மஞ்சள் வருவதால், குறைந்த பட்சம் 6,800 ரூபாய் முதல் அதிகபட்சம் 11 ஆயிரத்து 300 வரை விலை போகிறது.

ஈரோடு ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் முத்துராமலிங்கம் கூறியதாவது:உழவர்கள் தாங்கள் உற்பத்தி செய்த மஞ்சளின் மாதிரியை (சாம்பிள்) விற்பனைக்காக வைக்கின்றனர். மாதிரியில் என்ன மஞ்சள் உள்ளதோ, அதே மஞ்சள் மூட்டையிலும் இருக்கச் செய்வது விவசாயிகளின் கடமை. விவசாயிகள் தாங்கள் கொண்டுவரும் மஞ்சளை "கல்' இல்லாமல் சுத்தமாக கொண்டு வந்தால் அதிக விலை கிடைக்கும். டெண்டர் வாசித்து பத்து நிமிடத்துக்குள்ளாக மஞ்சள் விலையில் விவசாயிக்கு கருத்து மாற்றம் இருப்பின், அவர்கள் நேரில் தெரிவிக்கலாம். பரிசீலனை அடிப்படையில் சம்பந்தப்பட்ட "லாட்' நிராகரிக்கப்படும்.

தற்போது மஞ்சள் மார்க்கெட்டுக்கு 25 சதவீதம் புதுமஞ்சள் வரத்தாகி கொண்டுள்ளது. அதேபோல் மார்க்கெட்டுக்கு விற்பனைக்காக வரும் மஞ்சள் அளவில் ஃபிப்ரவரி கடைசி வரை ஏற்றம் இருக்க வாய்ப்புள்ளது. மார்ச் முதல் வாரத்தில் 90 சதவீதம் புதுமஞ்சள் வரத்து முடிந்துவிடும். புதுமஞ்சள் வரத்தாகி முடியும்வரை பழைய மஞ்சளின் விலை ஏற்றமாகவே இருக்க வாய்ப்புள்ளது. நேற்றைய நிலவரப்படி ஒழுங்குமுறை கூடத்தில் 615 மஞ்சள் மூட்டைகள் வரத்தானதில் 429 மூட்டைகள் விற்றன. விரலி குவிண்டாலுக்கு 9,839 முதல் 11 ஆயிரத்து 393 ரூபாய் வரையும், கிழங்கு மஞ்சள் 8,996 முதல் பத்தாயிரத்து 880 ரூபாய் வரையும் விலை போனது. இவ்வாறு அவர் கூறினார்.

**சர்க்கரையை தொடர்ந்து வெல்லம் விலையும் உயர்கிறது அறுவடை சீஸனிலும் கரும்பு வரத்து குறைவு**

ஈரோடு: கரும்பு உற்பத்தி குறைந்ததால் அறுவடை சீஸன் நேரத்திலும் கரும்பு வரத்து குறைந்துள்ளது. சர்க்கரையை தொடர்ந்து வெல்லம் விலையும் மேலும் உயரும் அபாயநிலை உள்ளது. ஈரோடு மாவட்டம் முழுவதும் பரவலாக நெல், மஞ்சள், வாழை, கரும்பு அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. கரும்புக்கு டன் ஒன்றுக்கு 2,000 ரூபாய் வழங்க கோரி கரும்பு விவசாயிகள் நீண்டகாலமாக போராடி வருகின்றனர். விலையை அரசு உயர்த்தாத நிலையில், கரும்பு சாகுபடி செய்த விவசாயிகள் ஆலைகளுக்கு பதிவு செய்யாத கரும்பையும், சம்பந்தப்பட்ட ஆலைகள் அனுமதியின்றி பிறருக்கு வெட்டக்கூடாது என சென்றாண்டு உத்தரவிட்டது.

அரசு கரும்புக்கு வழங்கிய விலை 1,350 ரூபாய், உற்பத்தி செலவுக்கு கூட கட்டுப்படியாகாமல், ஈரோடு மாவட்டம் மட்டுமின்றி, பிற மாவட்டங்களிலும் கரும்பு சாகுபடி குறைந்தது.மஞ்சள் ஒரு குவிண்டால் சென்றாண்டுக்கு முன் வரை 4,000 ரூபாய் வரைதான் விற்பனையானது. சென்றாண்டு மார்ச் மாதத்துக்கு பிறகு, மஞ்சள் விலை கடுமையாக உயர்ந்து, வரலாறு காணாத வகையில் 13 ஆயிரம் ரூபாயை தாண்டியது.
கரும்புக்கு விலையில்லாமல் தவித்த விவசாயிகள் மஞ்சளுக்கு மாறினர். இதனால், கரும்பு உற்பத்தி நடப்பாண்டு குறைந்தது. இரண்டு மாதத்துக்கு முன் மத்திய அரசு கரும்பு டன் ஒன்றுக்கு 1,445 ரூபாய் என விலை நிர்ணயம் செய்தது.

அத்துடன், "அனைத்து மாநில அரசுகளும் இதே விலை வழங்க வேண்டும். மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட, கூடுதல் விலையை மாநில அரசு வழங்க விரும்பினால், பொது நிதியிலிருந்து வழங்க வேண்டும்' எனவும் உத்தரவிட்டது. மத்திய அரசின் விலை நிர்ணய உத்தரவு, விவசாயிகளிடம் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.

மத்திய, மாநில அரசுகள் கரும்புக்கு வெட்டு கூலி, லாரி வாடகை சேர்க்காமல், 2,000 ரூபாய் விலை நிர்ணயம் செய்யாததால், தமிழகம் முழுவதும், பெரும்பாலான விவசாயிகள், டன்னுக்கு 2,300 ரூபாய் வரை வழங்கிய தனியார் நாட்டு சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பை வெட்டி வருகின்றனர். இதனால், அரசு மற்றும் தனியார் சர்க்கரை ஆலைகளில் நடப்பாண்டில் அரவைக்கு கூட போதுமான அளவு கரும்பு இல்லாத நிலையில் சர்க்கரை உற்பத்தி பாதிக்கப்படும் நிலை உள்ளது. தனியார் நாட்டு சர்க்கரை ஆலைகள் அதிக விலை வழங்கிய போதும், உற்பத்தி இல்லாத நிலையில் கரும்பு வரத்து குறைந்துள்ளது. ஜனவரி மாதம் முதல் ஃபிப்ரவரி இறுதி வரை ஆலைகளுக்கு கரும்பு அதிகளவு வெட்டப்படும்.

ஈரோடு மாவட்டத்தில் சித்தோடு, கவுந்தப்பாடி ஆகிய இடங்களில் வெல்லம் விற்பனை சந்தைகள் உள்ளன. சித்தோடு சந்தையில் 60 குடோன்கள் உள்ளன. சென்றாண்டு ஜனவரி மாதங்களில் சராசரியாக 28 ஆயிரம் முதல் 35 ஆயிரம் வரை வெல்லம் மூட்டைகள் தனியார் வெல்ல ஆலைகளில் இருந்து விற்பனைக்கு வந்தன. ஆனால், தற்போது கரும்பு சீஸனாக இருந்தபோதும், 12 ஆயிரம் மூட்டைகளே விற்பனைக்கு வந்தன. 60 கிலோ எடையுள்ள ஒரு மூட்டை 1,600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. தொடர்ந்து உற்பத்தி குறைவால் வெல்லம் விலையும் உயர்ந்து வருகிறது. மண்டிகளில் ஒரு கிலோ 25 ரூபாய் முதல் 30 ரூபாய் வரை கொள்முதல் செய்யப்படும் வெல்லம், வெளிசந்தையில் 35 ரூபாய் முதல் 40 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

**குறைந்த விலைக்கு 'சிந்தாமணி' து.பருப்பு**

ஈரோடு: ஈரோடு "சிந்தாமணி'யில் குறைந்த விலையில் துவரம்பருப்பு சிறப்பு விற்பனை துவக்கி வைக்கப்பட்டது.ஈரோடு "சிந்தாமணி' பஸ்ஸ்டாண்டு கிளையில், தமிழக அரசின் துவரம்பருப்பு சிறப்பு விற்பனை திட்டத்தை, கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர் அசோகன் துவக்கி வைத்தார். ஈரோடு "சிந்தாமணி' மற்றும் கிளைகளில் துவரம்பருப்பு முதல் தரம் கிலோ 65 ரூபாய், இரண்டாம் தரம் 60 ரூபாய், மூன்றாம் தரம் 50 ரூபாய்க்கும் கிடைக்கும். பொதுமக்கள் குறைந்த விலையில் கிடைக்கும் துவரம்பருப்பை பயன்படுத்தி கொள்ளலாம். "சிந்தாமணி' தனி அலுவலர் முத்துக்குமாரசாமி, மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் லோகநாதன், ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்ட பொது மேலாளர் ரேணுகா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**கோடை துவங்கும் வேளையில் தேங்காய் பருப்பு உற்பத்தி ஜோர்: மூன்று மாதத்துக்கு பின் கூடுதல் விலை**

கோபிசெட்டிபாளையம்: உலகளவில் தென்னை சாகுபடியில் இந்தியா, பிலிப்பைன்ஸ், இலங்கை, இந்தோனேஷியா நாடுகள் முன்னணியில் உள்ளன. ஆண்டுக்கு 37 லட்சம் ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்து இந்தோனேஷியா முதலிடத்திலும், 19.4 லட்சம் ஹெக்டேரில் தென்னை சாகுபடி செய்து இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. தென்னை பொருட்கள் மூலம் இந்தியாவுக்கு ஆண்டுக்கு 500 கோடி ரூபாய் அந்நிய செலவாணி கிடைக்கிறது.

இந்திய அளவில் ஒன்பது லட்சம் ஹெக்டேர் சாகுபடி செய்து கேரளா முதலிடத்திலும், 4.1 ஹெக்டேர் சாகுபடி செய்து தமிழகம் இரண்டாவது இடத்திலும் உள்ளது. உற்பத்தியை பொறுத்தவரை ஹெக்டேருக்கு 13 ஆயிரத்து 133 காய்கள் பெற்று தமிழகம் முதலிடத்தில் உள்ளது. ஈரோடு மாவட்டத்தை பொறுத்தவரை ஒரு தென்னை மரத்தில் ஆண்டுக்கு 100 முதல் 150 காய் வரை உற்பத்தியாகிறது. மாவட்டத்தில் கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசனப் பகுதிகளில் அதிகளவில் தென்னை மரங்கள் உள்ளன. கோபி பகுதியில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் பருப்புக்கு கேரளா உள்ளிட்ட வெளிமாநில எண்ணெய் ஆலைகளில் நல்ல மவுசு உண்டு. தேங்காய் பருப்பு கொள்முதல் செய்வதற்காக, ஆலை அதிபர்களும், வியாபாரிகளும் கோபிக்கு தேடி வருவது வழக்கமாகியுள்ளது. மூன்று மாதங்களாக தேங்காய் பருப்பு விலை கிலோ 30 ரூபாயைத் தாண்டவில்லை.

தற்போது தேங்காய் பருப்புக்கு 33 ரூபாய் கிடைக்கிறது. எனினும், கடுமையான குளிரால் தேங்காய் பருப்பை விவசாயிகளால் உற்பத்தி செய்ய முடியவில்லை. கோடைக்காலம் நெருங்க உள்ளதால் தேங்காய் பருப்பை அதிகளவில் உற்பத்தி செய்ய முடியும் என்று விவசாயிகள் நம்புகின்றனர். அதனால், கோபி மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் தென்னை மரங்களில் தேங்காய் பறிக்கும் பணியில் ஏராளமான தொழிலாளர்கள் ஈடுபட்டுள்ளனர். கோபி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் நடப்பு வாரம் தேங்காய் பருப்பு கிலோவுக்கு அதிகபட்சமாக 33.27 ரூபாய், குறைந்தப்பட்சமாக 32.87 ரூபாய், சராசரியாக 33.07 ரூபாய்க்கு ஏலம் போனது. கடந்த வாரத்தை விட நடப்பு வாரம் 62 பைசா அதிகம் கிடைத்துள்ளது. தேங்காய் பருப்புக்கு தொடர்ந்து அதிகமான விலை கிடைத்து வருவதால், கோபி மற்றும் சுற்று வட்டார பகுதியில் உற்பத்தி அதிகரித்துள்ளது.

**விதை கிராமத்திட்டம் பயிற்சி முகாம்**

குளித்தலை: தோகமலை அருகே கழுகூரில் விதை கிராமத்திட்டம் இரண்டாம் கட்ட பயிற்சி விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது.குளித்தலை அருகே வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் நடந்த முகாமில் நெல் இரண்டாம் கட்ட பயிற்சி அளிக்கப்பட்டது. மாவட்ட வேளாண்மை துறை இயக்குனர் சண்முகம் தலைமை வகித்தார். செம்மை நெல் சாகுபடி தொழில்நுட்பம் மற்றும் விதை நெல் சாகுபடி, உற்பத்தி குறித்து அவர் விளக்கினார். கழுகூர் பஞ்சாயத்து தலைவர் மணிமேகலை, விவசாயிகள் சங்க தலைவர் நடேசன் முன்னிலை வகித்தனர். வேளாண்மை அலுவலர் காதர் மொகைதின் வரவேற்றார். உதவி இயக்குனர் சேகர், அரசுதிட்டங்கள், மானியம் குறித்து விளக்கினார். விதை சான்று உதவி இயக்குனர் கைலாசபதி விதை நெல் முக்கியத்துவம், பண்ணை அமைத்தல் குறித்து பேசினார். புழுதேரி எஸ்.கே.வி.கே., தொழில்நுட்ப வல்லுனர் விஜய், ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் தடுப்பு குறித்து விளக்கிபேசினார். உதவி வேளாண்மை அலுவலர் செல்வகுமார் நன்றி கூறினார்.

**பாசன வாய்க்கால் பாலம் பழுது நீக்க கோரிக்கை**

குளித்தலை: குளித்தலையில் தென்கரை பாசன வாய்க்காலில் பழுதடைந்த பாலத்தை சீரமைக்க பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். குளித்தலை சபாபதி நாடார் தெரு, டி.எஸ்.பி., அலுவலகம் அருகே செல்லும் தென்கரை பாசன வாய்க்காலில் தடுப்பு சுவர் இல்லாமல், பழுது அடைந்த நிலையில் பாலம் உள்ளது. இங்குள்ள சுடுகாட்டுக்கு, பாலத்தின் வழியாகத்தான் சபாபதி நாடார் தெரு மற்றும் வாய்க்கால் கரையோர மக்கள் செல்ல வேண்டியுள்ளது. ஆறு மாதமாக முன் பாலம் பழுதடைந்து தடுப்பு சுவர் இடிந்து பாதுகாப்பு இல்லாத நிலையில் உள்ளது. இப்பகுதி மக்கள் தினசரி காவிரிக்கு செல்ல பாலத்தை பயன்படுத்த முடியாத நிலையில் அபாயகரமாக பாலம் உள்ளது. பழுதடைந்த பாலத்தை புதுப்பிக்கவோ, புதிதாக பாலம் அமைக்கவோ நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**மானிய விலையில் ஜிப்சம் உரம்**

மதுரை : ""நிலக்கடலைப் பயிருக்கு தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து ஆகியவை எவ்வளவு அவசியமோ, அதே அளவு சுண்ணாம்புச் சத்தும், கந்தகச் சத்தும் முக்கியம். இந்த இரு சத்துக்களும் நிறைந்த ஜிப்சம் உரம் அதிக மகசூலுக்கு தேவையாக உள்ளது'' என, தே.கல்லுப்பட்டி வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோ தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியதாவது: ஜிப்சம் உரம் இடுவதால், விழுதுகள் மண்ணில் நன்கு இறங்கி, நிறைய காய்கள் பிடிக்க வைக்கிறது. திரட்சியான காய்கள் காய்த்து மகசூல் அதிகரிக்க செய்கிறது. ஒரு எக்டேருக்கு 400 கிலோ வீதம் அடியுரமாக பாதியும், விழுதுகள் இறங்கும் சமயம் பாதியும் இட வேண்டும். உரத்தை சட்டியில் எடுத்து செடிக்கு மிக அருகில் வைக்கலாம் அல்லது காய்களிலும் இடலாம். இதனால், எக்டேருக்கு 150 கிலோ வரை கூடுதல் மகசூல் கிடைக்கிறது. விவசாயிகள், தே.கல்லுப்பட்டி வேளாண்மை விரிவாக்க மையத்தில் மானிய விலையில் வாங்கி பயன் அடையலாம் என, வேளாண்மை உதவி இயக்குனர் இளங்கோ தெரிவித்துள்ளார்.

**செம்மைநெல் சாகுபடி: ஆணையருக்கு செயல்விளக்கம் அளித்த விவசாயிகள்**

சோழவந்தான் : செம்மைநெல் சாகுபடி குறித்து சென்னை வேளாண் உற்பத்தி ஆணையர் நந்தகிஷோரின் கேள்விகளுக்கு சோழவந்தான் விவசாயிகள் விளக்கம் அளித்தனர்.

சோழவந்தான்,வாடிப்பட்டி வட்டார பகுதிகளில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலத்தில், இரண்டாம் போகம் செம்மைநெல் சாகுபடி பணிகள் நடக்கின்றன. இதை பார்வையிட, வேளாண் உற்பத்தி ஆணையர் நந்தகிஷோர் நேற்று வந்தார். பணிகளில் ஈடுபட்டிருந்த விவசாயிகளிடம் செம்மைநெல் சாகுபடி குறித்து கேள்விகள் கேட்டார். அவர்கள் மார்க்கர் கருவிகள் மூலம் நெல் நடவு முறைகள், நெல் விதை அளவு, கோனோர்வீடர் மூலம் களை எடுத்தல் முறைகள், ஒரு நாற்றில் அதிகமான சிம்புகள் இருப்பது, கூடுதலான மகசூல் கிடைப்பது மற்றும் உரம்,தண்ணீர்,செலவு சிக்கனம் குறித்து விவசாயிகள் செயல்முறை விளக்கம் அளித்தனர். இச்சாகுபடியின்

பயன்பாடு, விவசாயிகளின் ஆர்வம் குறித்து ஆணையர் மகிழ்ச்சி அடைந்தார். விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திய வேளாண்மைத்துறை அலுவலர்களை, ஆணையர் பாராட்டினார். ஆணையருடன் வேளாண்துறை துணைஇயக்குனர் சேவுகப்பெருமாள், வாடிப்பட்டி உதவிஇயக்குனர் ராமநாதன், தலைமை வேளாண் அலுவலர் குணசேகரன் மற்றும் உதவிவேளாண் அலுவலர்கள் உடன் சென்றனர்

**நெல் ஈரப்பதத்தை தளர்த்த முதல்வருக்கு கோரிக்கை**

திருத்துறைப்பூண்டி:கொள்முதல் நிலையங்களில் நெல்லின் ஈரப்பதத்தை தளர்த்தி ஊக்கத்தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.இதுகுறித்து முதல்வர் கருணாநிதிக்கு எம்.எல்.ஏ., உலகநாதன் அனுப்பியுள்ள மனு:காவிரி டெல்டா மாவட்டங்களில் நடப்பு சம்பா பருவத்தில் நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. நுகர்பொருள் வாணிபக்கழகம் மூலம் கொள்முதல் செய்வதால் நெல்லின் தரம் மற்றும் ஈரப்பதம் தொடர்பான முடிவுகளை மத்திய அரசிடம் எதிர்பார்க்கும் நிலை உள்ளது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர்.

மழை, பனி போன்றவை காரணமாக தற்போது நெல்லின் ஈரப்பதம் 22 சதவீதம் உள்ளது. ஆனால் 17 சதவீத ஈரப்பதம் கொண்ட நெல் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது. பனிக்காலத்தில் நெல்லின் ஈரப்பதத்தை தளர்த்தி 22 சதவீதம் வரை ஈரப்பத நெல்லை கொள்முதல் செய்வது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு அரசும், அதிகாரிகளும் மெத்தனம் காட்டுவதால் விவசாயிகள் நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்ய முடியாமல் தனியாரிடம் நெல்லை விற்று வருகின்றனர். இதை பயன்படுத்தி விவசாயிகளிடம் தனியார் குறைந்த விலைக்கு நெல்லை கொள்முதல் செய்கின்றனர். எனவே நெல்லின் ஈரப்பத அளவை தளர்த்தி ஊக்கத்தொகையை குவிண்டாலுக்கு 100 ரூபாயாக உயர்த்தி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**நெல் கொள்முதல் ஈரப்பதம் 22 % உயர்த்த முதல்வருக்கு எம்.எல்.ஏ., கோரிக்கை மனு**

திருத்துறைப்பூண்டி: ""காவிரி டெல்டா விவசாயிகளின் ஜீவாதார வாழ்க்கை தரத்தை உயர்த்த சம்பா நெல் கொள்முதல் ஈரப்பதத்தை 22 சதவீதம் வரை தளர்த்தி கொள்முதல் செய்திட வேண்டும்," என தமிழக முதல்வர் கணாநிதிக்கு எம்.எல்.ஏ., உலகநாதன் கோரிக்கை மனு அனுப்பினார். அவர் மனுவில் கூறியதாவது: டெல்டா மாவட்டங்களில் சம்பா பருவத்தில் தமிழக அரசு பரவலாக்கப்பட்ட கொள்முதல் திட்டத்தில் விவசாயிகளிடம் இருந்து நெல் கொள்முதல் செய்கிறது. மத்திய அரசின் கீழ் இயங்கும் இந்திய உணவு கழத்தின் ஏஜெண்ட்டாக மாநில அரசு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் கொள்முதல் செய்வதால் நெல்லின் தரம் மாற்றம், ஈரப்பதம் தொடர்பான முடிவுகளை மத்திய அரசிடம் எதிர்பார்த்து நிற்க வேண்டிய நிலை உள்ளது. இதனால், டெல்டா விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்.

டிசம்பர் மற்றும் ஜனவரி முதல் வாரம் வரை பெய்த மழை மற்றும் பனியால் தற்போது அறுவடை செய்யும் நெல்லின் ஈரப்பதம் 22 சதவீதம் வரை உள்ளது. ஆனால், தற்போது 17 சதவீதம் ஈரப்பதம் மட்டுமே மாநில அரசால் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்படுகிறது. இதனால், விவாயிகள் பிரச்னைக்கு ஆளாகின்றனர். மேலும், பனிக்காலத்தில் அறுவடை செய்யும் நெல் ஈரப்பதத்துடன் இருப்பதை உணர்ந்து மாநில அரசு ஈரப்பதத்தை தளர்த்தி 22 சதவீதம் வரை நெல் கொள்முதல் செய்வது வழக்கம். இந்தாண்டு அரசும், அரசு அதிகாரிகளும் மெத்தனம் காட்டியதால் விவசாயிகள் தனியாரிடம் குறைந்த விலைக்கு நெல்லை விற்க வேண்டிய நிலையுள்ளது. இடுப்பொரும் விலை உயர்வு, விவசாய கூலி உயர்வு, ஆள்பற்றாகுறை, சாக்குதட்டுபாடு ஆகியவற்றால் பரிதவிக்கும் விவசாயிகள் வேறுவழியின்றி தனியார் வியாபாரியிடம் விற்பனை செய்கின்றனர். இந்த போக்கு அரசின் பொது விநியோக திட்டத்தையும் பாதிக்கும்.

மாநில அரசு தடை விதித்தும் கொள்வார் இல்லை என்ற நிலையில் வெளி மாநிலங்களில் அரிசி கொள்முதல் செய்ய தொடங்கிவிட்டது. மாநில அரசு விவசாயிகளின் வாழ்வாதார பிரச்னையில் தலையிட்டு 22 ததவீதம் வரை ஈரப்பதத்தை தளர்த்தி குவிண்டாலுக்கு 100 ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்க வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். கொள்முதல் நிலையம் தேடிவரும் ஒரு சிலருக்கும் ஆள் பற்றாகுறை ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் அரிசி தட்டுபாடு இன்றி, பொது விநியோகம் தடையின்றி நடக்க அரசு அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுத்து ஈரப்பதத்தை தளர்த்தி, ஊக்கத் தொகை உயர்த்தி நெல் கொள்முதல் செய்திட வேண்டும், என அம்மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

**விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க கோரிக்கை**

பெரம்பலூர்: பெரம்பலூர் மாவட்டத்திற்கு தனியாக விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் என அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.வேப்பந்தட்டை வட்டார விவசாய ஆர்வளர்கள் குழுத்தலைவர் வரதராஜன் பெரம்பலூர் கலெக்டருக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது. பெரம்பலூர் மாவட்டத்தில் வேப்பந்தட்டை தாலுகா அரும்பாவூர், பூலாம்பாடி, மலையாளப்பட்டி, கொட்டாரகுன்று, தொண்டமாந்துறை, அன்னமங்களம், வி.களத்தூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் நெல் பயிரிடப்படுகிறது.ஒருங்கிணைந்த பெரம்பலூர் மாவட்டத்திற்காக அரியலூர் மாவட்டம் திருமானூரில் விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. திருமானூர் வேப்பந்தட்டையில் இருந்து வெகு தொலைவில், அது அரியலூர் மாவட்டத்தில் இருப்பதால் பெரம்பலூர் பகுதி விவசாயிகள் விதை சுத்திகரிப்புக்காக திருமானூர் சென்று வருவதில் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. இதனால் விவசாயிகள் தரமற்ற விதைகளை பயிரிட்டு அவதிக்குள்ளாகின்றனர்.இந்நிலையை போக்க பெரம்பலூர் மாவட்டத்திற்கென தனியாக விதை சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் .அதுவும் குறிப்பாக நெல் அதிகமாக பயிரிடப்படும் வேப்பந்தட்டை பகுதியில் அமைக்கப்பட வேண்டும் என அந்த மனுவில் கூறியுள்ளார்.

**விவசாயிகள்பெரும் பணக்காரர்களாக வருவார்கள் : கலெக்டர்**

புதுக்கோட்டை : இந்தியாவில் உணவு பற்றாக்குறை ஏற்படும் போது விவசாயிகள் தான் பெரும் பணக்காரர்களாக வருவார்கள் என்று கலெக்டர் சுகந்தி கூறினார்.
புதுகை மாவட்ட வேளாண்மை தொழில் நுட்ப மேலாண்மை முகமை விரிவாக்க சீரமைப்பு(ஆத்மா) திட்ட ரபி பருவ சிறப்பு முனைப்பு இயக்க தொடக்க விழா புதுகையில் கலெக்டர் சுகந்தி தலைமையில் நடந்தது. கூட்டத்தில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகத்துறை,வேளாண் இடுபொருள் வழங்கும் துறை உள்ளிட்ட 27 துறை ஸ்டால்களை திறந்து வைத்தும், 11 நபர்களுக்கு 5.5லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி கலெக்டர் சுகந்தி பேசியதாவது : விழாவில் பல்வேறு துறை விளக்க கண்காட்சி இடம் பெற்றுள்ளது பாராட்டுக்குரியது. இந்த கண்காட்சியில் வேளாண் சம்பந்தப்பட்ட துறையில் அரசு எவ்வாறு பணி செய்து வருகிறது, வேளாண் இடுபொருளை இட்டால் விவசாயிகளுக்கு பயன்தரும் என்பது உள்ளிட்ட பல அம்சங்கள் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளன. விவசாயிகள் விளைவித்த பொருளை அரசு எவ்வாருறுகொள்முதல் செய்கிறது என்ற விபரமும் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது. ஒரு நாடு முன்னேற்றம் அடைய வேண்டுமானால் அந்த நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற்ற நாடாக இருக்க வேண்டும். பசி இல்லாத நாடே சிறந்த நாடாகும். பசி குறைந்தால் தான் நாடு வளர்ச்சியடையும். விவசாயிகள் எவ்வளவு பிரச்னைகள் வந்தாலும் சோர்வடையக்கூடாது. தற்போது விளைநிலங்கள் தொழிற்சாலைகளாகவும், பிளாட்டுகளாகவும் மாறி விவசாய நிலப்பரப்பு சுருங்கி வருகிறது. 10 ஆண்டுகளுக்குள் உணவு தட்டுப்பாடு ஏற்படும் என்ற கருத்து நிலவுகிறது. அப்போது விவசாயிகள் தான் பெரும் பணக்காரர்களாக வருவார்கள்.1955ம் ஆண்டு முதலே நாம் உணவு பொருட்களை இறக்குமதி செய்து கொண்டுள்ளோம். ஆனால் தற்போது பருப்பு கூட இறக்குமதி செய்யப்படும் அளவுக்கு தள்ளப்பட்டுள்ளது வருந்தத்தக்கதாக உள்ளது. தற்போது விவசாய நிலங்கள் உள்ள விவசாயிகள் தங்களது நிலங்களை விற்காமல் காத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் சப்கலெக்டர்(பயிற்சி) மேனகா, மாவட்ட ஊராட்சித்தலைவர் முத்துசாமி, துணைத்தலைவர் சந்திரசேகர், புதுகை நகராட்சித்தலைவர் ராமதிலகம், தமிழ்நாடு விதை சான்றளிப்புத்துறை இயக்குனர் கார்முகிலன், நகராட்சி கவுன்சிலர் இப்ராஹிம் பாபு, கறம்பக்குடி ஒன்றிய சேர்மன் பெர்னத்மேரி, கந்தர்வகோட்டை ஒன்றியசேர்மன் மாரியய்யா, மணமேல்குடி ஒன்றியக்குழு துணைத்தலைவர் சீனியார், ஆத்மா குழு தலைவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். வேளாண் இணை இயக்குனர் கிருஷ்ணசாமி வரவேற்றார். வேளாண் துணை இயக்குனர் ராஜு நன்றி கூறினார்.

**புதுமடம் அருகே நெல் அறுவடை துவங்கியது**

உச்சிப்புளி: மண்டபம் ஒன்றியத்தில் 2000க்கும் அதிகமான எக்டேரில், நடப்பாண்டில் விவசாயிகள் விவசாய பணிகளை மேற் கொண்டனர்.இதில், பெரும்பாலான இடங்களில் நெற்பயிர்கள் பாதிப்பில்லாத நிலையீல் காணப்படுகிறது.சில பகுதிகளில் போதுமான மழை இல்லாததால், பயிர்களில் பூச்சி ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புதுமடம் அருகே அம்மா பட்டினம் பகுதியில் கடந்த மூன்று மாதங்களுக்கு முன் ,சாகுபடி செய்யப்பட்ட நெற் பயிர்கள் அறுவடை காலத்தை எட்டி உள்ளது.இதை தொடர்ந்து விளைந்த நெற்பயிர்களை அறுவடை செய்யும் பணி துவங்கி உள்ளது. வேலை உறுதியளிப்பு திட்டபணிகள் நடைபெறாததால் , அறுவடை பணிக்கும் ஆட்கள் கிடைப்பதில் சிரமம் எற்படவில்லை.விவசாயி செல்வம்(அம்மா பட்டினம்) கூறியதாவது:அறுவடை செய்வதற்கு பத்து நாட்கள் உள்ளது. பயிர்களில் நீர் தேங்கியதால் அறுவடை செய்யாமல் விட்டு விட்டால், பயிர்களில் முளைப்பு பாதிப்புஏற்படும்.மேலும், சில நாட்கள் சென்று விட்டால் அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காத நிலை ஏற்படும். இதன் காரணமாக, அறுவடை பணியை துவங்கி விட்டோம், என்றார்.

**சம்பா பருவ நெல்லில் லட்சுமி நோய் தாக்கம்**

தேவகோட்டை : தேவகோட்டை ஒன்றியம் புதுக்குறிச்சி, தூனுகுடி, கற் களத்தூர், குருந்தனக் கோட்டை, செலுகை கிராமங்களில், சம்பா பருவ நெற்பயிர் கதிர் முற்றிய நிலையில் உள்ளது.
பி.பி.டி., 5204 ரக நெற்பயிரில் கரிப்பட்டை நோய் தாக்குதல் உள்ளது. விளைச்சல் நன்றாக உள்ள வயல்களில் நோய் தாக்குவதால், இதை "லட்சுமி நோய்' என்கின்றனர். இந்நோய் தாக்கிய நெல்மணிகள் கருமையாக மாறும். கட்டுப்படுத்த: நெல் கதிர் பால் பிடிக்கும் நேரத்தில், ஏக்கருக்கு 400 கிராம் "மாஸ்கோசேப்' , 200 கிராம் "பெவிஸ்டின்', 400 கிராம் "புரோபியோ கோனோஜோஸ்', இவற் றில் ஏதாவது ஒன்றை, 200 லிட்டர் தண்ணீரில் கலந்து, மாலையில் தெளிக்க வேண்டும். இந்த நோய் விதை மூலமும் பரவும். நோய் கண்ட வயலில் அறுவடையாகும் நெல்லை, விதையாக பயன்படுத்த கூடாது என விவசாய இணை இயக்குனர் சுப்பிரமணியன் தெரிவித்தார். அவர் மற்றும் கலெக்டரின் நேர்முக உதவியாளர் வெள் ளைச்சாமி, துணை இயக்குனர் ரவிகுலசேகரபாண்டியன், உதவி இயக்குனர் சம்பத் இப்பகுதிகளை ஆய்வு செய்தனர்.

**நெல்லுக்கு பின் பயறு பயிரிடலாம்**

சிவகங்கை : விவசாய இணை இயக்குனர் சுப்பிரமணியன் அறிக்கை: நீர், நிலவள திட்டத்தின் கீழ், சம்பா நெல் அறுவடை செய்யப்பட்ட நிலங்களில், பயறு வகைகளை சாகுபடி செய்யலாம். இதற்கு ஒரு எக்டேருக்கு 1,500 ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். கோட்டக்கரையாறு, மணிமுத்தாறு உபவடிநில பகுதிகளில் விதை, உயிர், ரசாயன உரங்கள், வேம்பு மருந்து போன்றவை வழங்கப்படும். விரிவாக்க மையங்களில் இவை கிடைக்கும். உளுந்தம் பயிறுக்கு 1,500 ரூபாய், மக்காச்சோளம், நிலக்கடலைக்கு 4,000 மானியம் வழங்கப்படும். மண்புழு உரக்கூடம் அமைக்க, ஒரு யூனிட்டுக்கு 6,000 ரூபாய் மானியத்துடன் பயிற்சி, உபகரணங்கம் வழங்கப்படும், என தெரிவித்தார்.

**விவசாயிகள் பயிற்சி: ஏர்வாடியில் நாளை துவக்கம்**

திருநெல்வேலி: ஏர்வாடியில் வேளாண்மை பொறியியல் துறை சார்பில் விவசாயிகள் பயிற்சி நாளை (3ம் தேதி) துவங்குகிறது. இதுகுறித்து நெல்லை வேளாண்மை பொறியியல் துறை செயற் பொறியாளர் சந்திரன் அறிக்கையில் கூறியிருப்பதாவது: நெல்லை மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறையின் மூலம் வேளாண் இயந்திரங்களை கையாளுதல், பராமரித்தல் போன்றவை குறித்து 4 பயிற்சிகள் நடத்திட நடப்பு நிதியாண்டிற்கு ரூ.1.08 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண்மை இயந்திரமயமாதலை விவசாயிகளிடம் பிரபலபடுத்துதல் மற்றும் விவசாய உற்பத்தி திறன், விவசாயிகளின் வருமானத்தை அதிகரித்தல் ஆகியவையே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.

இப்பயிற்சியில் விவசாயிகள் பங்கேற்பதன் மூலம் வேளாண்மையில் இயந்திரங்களை பயன்படுத்தி பணிகளை வேகமாகவும், முறையாகவும் முடிக்கலாம். இதனால் விவசாயிகளுக்கு பெருமளவு செலவும், வேலைப் பளுவும் குறையும். வாழ்க்கை தரத்தினை உயர்த்திட ஏதுவாகும். சேரன்மகாதேவி வேளாண்மை பொறியியல் துறை உதவி செயற் பொறியாளர் அலுவலகம் மூலம் 20 விவசாயிகளுக்கு நாளை (3ம் தேதி) முதல் 17ம் தேதி வரை ஏர்வாடி டி.வி.எஸ்.பண்ணையில் பயிர் பாதுகாப்பு கருவி தேர்வு செய்தல், இயக்குதல், பராமரித்தல் குறித்து பயிற்சி நடைபெறுகிறது.

இதேபோல் வரும் 10ம் தேதி முதல் 24ம் தேதி வரை பழவூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் பாசனத்திற்கான பம்ப் செட்கள் குறித்தும் சொட்டுநீர் பாசனம், தெளிப்பு நீர் பாசனம் மற்றும் பாசன நீரை சேமிக்கும் கருவிகள் குறித்து பயிற்சி நடக்கிறது. பயிற்சிக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட உதவி தொகை வழங்கப்படும். ஆர்வமுள்ள விவசாயிகள் மற்றும் விவசாய குடும்பத்தை சேர்ந்த இளைஞர்கள் பயிற்சியில் கலந்து கொள்ள சேரன்மகாதேவி அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**கறவை மாடு, கோழிப்பண்ணைக்கு கடன்: மகளிர் சுயஉதவி குழுவினர் வேண்டுகோள்**

திருநெல்வேலி: கூட்டுறவு வங்கிகள் மூலம் மகளிர் சுயஉதவி குழுக்களுக்கு கறவை மாடு கடன், கோழிப்பண்ணை வைக்க கடன் வழங்க வேண்டும் என மகளிர் சுயஉதவி குழுவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பள்ளக்கால் பொதுக்குடியில் உள்ள பொதுக்குடி வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் உறுப்பினர் கல்வி திட்ட முகாம் நடந்தது. முகாமிற்கு இடைகால் பஞ்.,கவுன்சிலர் தவசி தலைமை வகித்தார். அடைச்சாணி முன்னாள் பஞ்.,யூனியன் கவுன்சிலர் சவுந்திரபாண்டியன் முன்னிலை வகித்தார். கூட்டுறவு சங்க செயலர் பேச்சி வங்கி வழங்கும் கடன் திட்டங்கள் குறித்து பேசினார். கூட்டுறவு பிரசார அலுவலர் பத்மநாபன் வரவேற்றார்.

கூட்டுறவு சங்க உறுப்பினர் பழனி பேசும் போது, "கூட்டுறவு சங்கத்திற்கு சுற்றுச்சுவர் கட்ட வேண்டும்' என்றார். சித்ரா மகளிர் சுயஉதவி குழுவின் சார்பில் இசக்கியம்மாள் பேசும் போது, "கறவை மாடு கடன் வேண்டும். பெண்கள் மாடு வளர்த்து தொழில் செய்ய தயாராக உள்ளனர். இந்த பகுதியில் கறவை மாடு வளர்க்க தேவையான சூழ்நிலை உள்ளது' என்றார். கூட்டுறவு சங்க தனி அலுவலர் ராஜரத்தினம் பேசும் போது, "விரைவில் கறவை மாடு கடனுக்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும் அதேபோல் கோழிப்பண்ணை வைக்கவும் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும்' என்று கூறினார். முகாமில் ஒரு குழுவிற்கு ரூ.60 ஆயிரம் கடன் வழங்கப்பட்டது. சங்க செயலர் பேச்சி நன்றி கூறினார். முகாமில் மகளிர் சுயஉதவி குழுவினர், சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

**கோடை வெயில் வரும் முன்பே தர்ப்பூசணி விற்பனை துவக்கம்**

தென்காசி: கோடை வெயில் வரும் முன்பே தென்காசி பகுதியில் தர்பூசணி விற்பனை துவங்கியது. கோடை வெயிலில் இருந்து தப்பிக்க பொதுமக்கள் குளிர்பானங்களை நாடிச் செல்வது வழக்கம். இதனால் ஆண்டுதோறும் கோடை காலத்தில் குளிர்பானங்களின் விற்பனை அமோகமாக இருக்கும். கோடை வெயிலை சமாளிக்க வெள்ளரிக்காய், தர்பூசணி, இளநீர், நுங்கு உள்ளிட்ட இயற்கை உணவுகளை உட்கொள்ள டாக்டர்கள், இயற்கை ஆர்வலர்கள் அறிவுறுத்துகின்றனர். இதற்கு வலு சேர்க்கும் வகையில் இந்த ஆண்டு கோடை வெயில் துவங்குவதற்கு முன்பே தென்காசி பகுதியில் தர்பூசணி, வெள்ளரிக்காய் விற்பனை துவங்கி விட்டது.

தென்காசி பகுதியில் சாலையோரத்தில் தர்பூசணி அதிகளவில் குவிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ தர்பூசணி 12 ரூபாய் என்றும், தர்பூசணி துண்டு ஒன்றுக்கு 3 ரூபாய் என்றும் விற்பனை செய்யப்படுகிறது. பொதுமக்கள் ஆர்வத்துடன் தர்பூசணியை வாங்கி சாப்பிடுகின்றனர். வீடுகளுக்கும் வாங்கி செல்கின்றனர்.

**விவசாய மேம்பாட்டுத் திட்டத்தில் 55 பேருக்கு ரூ.10 லட்சம் நிதியுதவி**

திருவாரூர்:தேசிய விவசாய மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் திருவாரூரில் 55 பயனாளிகளுக்கு 10 லட்ச ரூபாய் நிதியுதவியை கலெக்டர் சந்திரசேகரன் வழங்கினார்.11வது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் (2007–12) விவசாயத்துறையை மேம்படுத்தும் வகையில் செம்மறி ஆடு வளர்த்தல், பசுந்தாள் சேமிப்பு குழிகள் அமைத்தல், பசுந்தீவன புல் வளர்த்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி திருவாரூரில் 40 பயனாளிகளுக்கு தலா 1 ஏக்கரில் பசுந்தீவன புல் வளர்க்க 4 லட்சம் ரூபாய், பசுந்தாள் சேமிப்பு குழிகள் அமைக்க 5 பேருக்கு தலா 30 ஆயிரம் ரூபாய் மற்றும் 10 பேருக்கு செம்மறி ஆடு வளர்க்க நிதியுதவி என மொத்தம் 10 லட்சத்து 22 ஆயிரம் ரூபாய்க்கான காசோலையை கலெக்டர் சந்திரசேகரன் வழங்கினார்.

பின்னர் அவர் பேசுகையில், விவசாய மேம்பாட்டு திட்டத்தை தீவிரமாக செயல்படுத்த தேவையான நிதியுதவியை அரசிடமிருந்து பெற்று தர மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது என்றார். டி.ஆர்.ஓ., ஜான்லூயிஸ், கால்நடைத்துறை இணை இயக்குனர் குணசேகரன், உதவி இயக்குனர்கள் அழகிரிசாமி, பழனிச்சாமி, உதவி டாக்டர்கள் ஹமித்அலி, தனபால், சுரேஷ், ஈஸ்வரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**நீர்வள நிலவள திட்டத்தில் காயல்குடி ஆறு உப வடிநில பகுதிகளை செப்பனிட மதிப்பீடு**

ஸ்ரீவில்லிபுத்தூர்: ஸ்ரீவில்லிபுத்தூர் உப கோட்டத்திற்குட் பட்ட காயல்குடி ஆறு பாயும் உப வடி நில பகுதி பொதுப்பணித்துறை கண்மாய் களை நீர்வள நிலவள திட்டத்தில் செப்பனிட மதிப்பீடு செய்யும் பணி நடந்து வருகிறது.ஸ்ரீவில்லிபுத்தூர் உப கோட்டத்திற்குட்பட்ட அர்ஜூனா நதிக்கரையோரமுள்ள பொதுப்பணித்துறைக்கு சொந்தமான 25 கண்மாய்கள், 9 அணைக்கட்டுகள் 8.45 கோடி ரூபாயில் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் செப்பனிடும் பணி கடந்த இரு ஆண்டுகளாக நடந்து வருகிறது. இதில் காயல்குடி பாயும் கண்மாய்கள் விடுபட்டு இருந்தது.

இதனால் இக்கண்மாய் விவசாயிகள் தங்கள் பகுதியையும் நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் சேர்த்து கண்மாய்களை செப்பனிட அரசுக்கு வேண்டுகோள் விடுத்தனர். இதையடுத்து, தற்போது காயல்குடி ஆறு பாயும் கண்மாய்களை நீர்வள நிலவள திட்டத்தில் சேர்க்க அரசு உத்தரவிட்டது. இதன் படி காயல்குடி ஆறு பாயும் கண்மாய் பகுதிகளான திருமலை வணங்கினான் கண்மாய், இடையன்குளம் கண்மாய், படிக்காசுவைத்தான் பட்டி கண்மாய், அச்சம்தவிர்த்தான் வடகரை அணைக்கட்டு, வேப்பங்குளம் கண்மாய்,பிள்ளையார்குளம் அணைக்கட்டு, சித்தர்குளம், கொத்தன்குளம், மேலபாட்டம் கரிசல் குளம், செட்டிகுளம் கண்மாய், சிவகாசி தாலுகாக்குட்பட்ட 3 கண்மாய் பகுதிகளை செப்பனிட ஆகும் செலவு குறித்த மதிப்பீடு தயார் செய்யும் பணியில் பொதுப்பணித்துறையினர் ஈடுபட்டு வருகின்றனர்.

**வேளாண்மை கருத்தரங்கம்**

சாத்தூர் : சாத்தூர் அருகேயுள்ள கே. சொக்கலிங்கபுரத்தில் இயற்கை வேளாண்மை குறித்த கருத்தரங்கம்,பேராசிரியர் என்.ஜி. ரங்கா இயற்கை வேளாண்மை சங்கம்,ஜெய்கிஷன் துல்லிய பண்ணையம், கண்ணன் பண்ணை உழவர் தின விழா ஆகிய சங்கங்களின் முப்பெரும் விழா நடந்தது. முன்னாள் எம்.பி. ராமமூர்த்தி தலைமை வகித்தார். தொழில் அதிபர் ராமசாமி முன்னிலை வகித்தார்.

தாக்குப்பிடிக்குமோ வேளாண்மை' என்ற தலைப்பில் வேளாண்மை கருத்தரங்கம் நடந்தது. திருச்சி கி. சுப்பிரமணியன் இயற்கை வேளாண் தொழில் நுட்பங்களை கடைப் பிடித்தால் வேளாண்மை தாக்குப் பிடிக்கும் என்றார்.இயற்கை உரம் பற்றி பி. ரகுபதி,பூச்சி கொல்லிகள் குறித்து செல்வம், அரசு வழங்கும் சலுகைகளை குறித்து அதிகாரிகள் ஜான்கிறிஸ்டோபர் கிப் செல்லம், பழனிச் செல்வம், விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் பற்றி ஐ.ஓ.பி. மேலாளர் செல்லத்துரை பேசினர். ஆந்திராவில் விதை உற்பத்தியில் சாதனை புரிந்த விபரத்தை வேளாண்மை அலுவலர் சீனிவாசன் கூறினார். ஏற்பாடுகளை பேராசிரியர் குரு.ஜெகநாதன் செய்திருந்தார்.

**கூட்டுறவு சங்கம் நடத்தும்மண், நீர் பரிசோதனை மையம்**

சேத்தூர் : முகவூரில் கூட்டுறவு கடன் சங்கம் மூலம் மண், நீர் பரிசோதனை மையம் அமைக்கப்பட்டுள்ளது.விளை நிலங்களில் உள்ள மண், நீரின் தரத்தை அறிய தனியார் பரிசோதனை மையங்கள் ஏற்கனவே உள்ளன. இந்நிலையில் கூட்டுறவு கடன் சங்கம் மூலம் நவீன வசதிகளுடன் முகவூரில் பரிசோதனை மையம் அமைக்கப்பட்டுள்ளது.கியூ 837 முகவூர் உழவர் பணி கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் அமைக்கப் பட்டுள்ள இம்மையத்தில் 6 லட்சம் ரூபாய் மதிப்பிலான நவீன கருவிகள் அமைக்கப்பட்டுள்ளன.முகவூர் மற்றும் சுற்றுவட்டாரத்தில் உள்ள விவசாயிகள், தங்களது நிலத்தில் உள்ள மண் மற்றும் நீர் மாதிரிகளை சேகரித்து, இம்மையத்தில் அளித்து அதன் தரத்தை அறிந்து கொள்ளலாம்.

மிகக்குறைந்த கட்டணமாக, ஒரு ஆய்வுக்கு 10 ரூபாய். கூட்டுறவு கடன் சங்க செயலாளர் ராஜேந்திரன் கூறுகையில், "" மாவட்டத்தில் முதன் முறையாக கூட்டுறவு சங்கம் சார்பில், நவீன மண், நீர் பரிசோதனைக் கூடம் இங்கு தான் அமைக்கப்பட்டுள்ளது. காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்படும். இம்மையத்தில் விவசாயிகள் காலையில் மண், நீர் மாதிரிகளை கொடுத்தால், மாலைக்குள் அதன் முடிவுகளை தெரிந்துகொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. மண் வளத்தையும், நீரின் தன்மையையும் அறிந்து விவசாயம் செய்வதால், உரம் உள்ளிட்ட இடுபொருட்களை திட்டமிட்டு பயன்படுத்த முடியும். இதன் மூலம் விளைச்சல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இங்கு பயிர் சாகுபடி ஆலோசனைகளும் வழங்கப்படும்" என்றார்.

**நிலக்கடலை வரத்து அதிகரிப்பு**

அவிநாசி : சேவூரில் நேற்று நடந்த ஏலத்துக்கு நிலக்கடலை வரத்து அதிகரித்திருந்தது.
சேவூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று நடந்த நிலக்கடலை ஏலத்துக்கு 500 மூட்டை வரத்தாக இருந்தது. இது, கடந்த வாரத்தை காட்டி லும் 150 மூட்டை அதிகம். வரத்து அதிகரித்திருந்த நிலையில், மூன்று ரக நிலக்கடலையும் குவிண்டா லுக்கு ரூ.60 முதல் ரூ.230 வரை அதிகரித்தது.
அனைத்து ரக நிலக்கடலை விலை விபரம் (குவிண்டாலுக்கு) பின்வருமாறு: நிலக்கடலை (காய்ந்தது) முதல் ரகம் ரூ.3,250 முதல் ரூ.3,370 வரை, இரண்டாம் ரகம் ரூ.3,050 முதல் ரூ.3,230 வரை, மூன்றாம் ரகம் ரூ.2,950 முதல் ரூ.3,000 வரை.
ஏலம் குறித்து ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் (பொ) நடராஜன் கூறுகையில், ""கடந்த வாரத்தை காட்டிலும் 150 மூட்டை அதிகரித் துள்ளது. நிலக்கடலை தரம் நன்றாக இருந்ததால், விலையும் அதிகரித்தது. கடந்த வாரத்தை விட முதல் ரகம் ரூ.60, இரண்டாம் ரகம் ரூ.230, மூன்றாம் ரகம் ரூ.210 வரை உயர்ந்தது. ""மொத்தம் ரூ.5 லட்சத்துக்கு வர்த்தகம் நடந்தது. ஏலத்தில் 165 விவசாயிகள், 10 வியாபாரிகள் பங்கேற்றனர்," என்றார்.

**விவசாயிகளுக்கு சிட்டா வழங்குவதற்கு பொள்ளாச்சி தாலுகா அலுவலகத்தில் சிக்கல்!**

பொள்ளாச்சி : விவசாயிகளுக்கு கம்ப்யூட்டர் சிட்டா வழங்குவதில் பொள்ளாச்சி தாலுகா அலுவலகத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்துவதற்கும், வருவாய்துறையின் செயல்பாடுகளை அறிந்து கொள்வதற்கும் பொள்ளாச்சி தாலுகா அலுவலகத்தில் கம்ப்யூட்டர் தொடுதிரை அமைக்கப்பட்டது.
சில மாதங்களில் தொடுதிரை செயல் இழந்தது. இதன்பின், விவசாயிகள் கம்ப்யூட்டர் "சிட்டா' பெற்றால் மட்டுமே கிராம நிர்வாக அலுவலகத்தில் "அடங்கல்' வழங்கப்பட்டது. தற்போது, வங்கி கடன், பத்திரப்பதிவு, அரசு மானிய திட்டங்கள், கொப்பரை கொள்முதல் அடையாள அட்டை பெறுவதற்கு கம்ப்யூட்டர் சிட்டா முக்கிய ஆவணமாக சேர்க்கப்பட்டுள்ளது.பொள்ளாச்சி தாலுகா அலுவலகத்தில் சில மாதங்களாக கம்ப்யூட்டர் சிட்டா வழங்க காலை முதல் மதியம் வரை பதிவு செய்வோருக்கு, மதியத்திற்கு மேல் வழங்கப்பட்டது. இதற்கு, எதிர்ப்புதெரிவித்த விவசாயிகள், பழைய முறைப்படி ஒரு மணி நேரத்திற்குள் சிட்டா வழங்க வேண்டும் என வலியுறுத்தினர்.நிறுத்தம் : இந்நிலையில், ஒரு மாதமாக தாலுகா அலுவலகத்தில் கம்ப்யூட்டர் சிட்டா வழங்கவில்லை. இது குறித்து விவசாயிகள் முறையீட்டுக்குழு கூட்டத்தில் தெரிவித்த போது, "கம்ப்யூட்டர் பிரின்ட்டர் பழுதடைந்திருப்பதால் விரைவில் சீரமைக்கப்படும்' என அதிகாரிகள் உறுதியளித்தனர்.
ஆனால், ஒரு மாதத்திற்கும் மேலாக பிரச்னை நீடிப்பதால், விவசாயிகள் "இன்டர்நெட் பிரவுசிங் சென்டரில்' கம்ப்யூட்டர் சிட்டா பிரின்ட் எடுத்து தாலுகா அலுவலகத்தில் ஒப்புகை கையெழுத்து பெறுகின்றனர். இதற்கு, சில வருவாய்த்துறை அதிகாரிகள் எதிர்ப்பு தெரிவித்து கையெழுத்து போட மறுக்கின்றனர். தாசில்தார் வேணுகோபால் கூறியதாவது: கம்ப்யூட்டர் பிரின்ட்டர் பழுதானதது குறித்து கோவை மாவட்ட நிர்வாகத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டது. உதிரி பாகங்கள் கிடைக்காததால், பிரின்ட்டரை மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. " விப்ரோ' நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. இரண்டு நாளுக்குள் புதிதாக பிரின்ட்டர் பொருத்தப்பட்டு, சிட்டா வழங்கும் பணிகள் துவங்கப்படும். அதுவரையிலும் விவசாயிகள் இன்டர்நெட் பிரவுசிங் சென்டரில் எடுத்து வரும் சிட்டாவை இங்குள்ள ஆவணங்களில் ஒப்பிட்டு பார்த்து, அதிகாரிகள் "சீல்' வைத்து கையெழுத்து போட்டு கொடுக்கிறார்கள். இதற்கு தாலுகா அலுவலகத்தில் கட்டடணம் வசூலிப்பதில்லை.
கம்ப்யூட்டர் பிரின்ட்டர் பிரச்னை முடிவுக்கு வரும் வரையிலும், விவசாயிகள் இன்டர்நெட் சென்டரில் அரசு வெப்சைட்டில், கோவை மாவட்டத்தில் பொள்ளாச்சி தாலுகா என்னும் பிரிவுக்கு சென்றால் கம்ப்யூட்டர் சிட்டாவை"டவுன்லோடு' செய்து பிரின்ட் எடுத்துக்கொள்ளலாம்.இவ்வாறு, தாசில்தார் வேணுகோபால் தெரிவித்தார்.பொள்ளாச்சி தாலுகா அலுவலகத்தில் அரசு அனுமதியின்றி எத்தனையோ பணிகள் நடக்கிறது. இந்த பிரச்னைக்கு தீர்வு காணாமல் இருப்பது வேதனையளிக்கிறது என விவசாயிகள் புலம்புகின்றனர்.

**வாழைக்கு வங்கி கடன் வேளாண் அதிகாரி தகவல்**

அன்னூர் : "வாழை விவசாயிகளுக்கு வங்கி கடன் ஏற்பாடு செய்து தரப்படும்' என, தோட்டக்கலைத்துறை அதிகாரி தெரிவித்தார். தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம், பசூர் ஊராட்சியில் செயல்படுத்தப்படுகிறது. இதில், 20 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். திட்ட விளக்க கூட்டம் பசூரில் நடந்தது. தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் பிரேம்குமார் பேசியதாவது:இத்திட்டத்தில் விவசாயிக்கு ஒரு ஹெக்டேருக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க 37 ஆயிரத்து 440 ரூபாயும், 15 ஆயிரம் ரூபாய்க்கு திரவ வழி உரமும், திரவ வழி உரத்தொட்டி அமைக்க 11 ஆயிரத்து 200 ரூபாயும் மானியமாக வழங்கப்படும். நீர் சேமிப்பு, களை, உர நிர்வாகம் ஆகியவற்றை சரியாக பின்பற் றினால் அதிக விளைச்சல் கிடைக்கும். வாழை விவசாயி களுக்கு வங்கி கடனும் ஏற்பாடு செய்து தரப்படும். இவ்வாறு, பிரேம்குமார் பேசினார்.
கூட்டத்தில், துல்லிய பண்ணை திட்டத்தின் குழு தலைவராக சந்திரன், துணை தலைவராக ஞானசேகரன், செயலாளராக நாராயணசாமி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். துணை தோட்டக்கலை அலுவலர் சந்திரன், உதவி வேளாண் அலுவலர் சண்முகம் உள்பட பலர் பங்கேற்றனர்.

**'அழிந்து வரும் பசுவை காப்பாற்ற வேண்டும்' இயற்கை விஞ்ஞானி அழைப்பு**

பொள்ளாச்சி : "அழிந்து வரும் நாட்டு பசு இனத்தை காப்பாற்றவும், இயற்கை வேளாண்மையை ஊக்குவிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.

ஆனைமலை காந்தி ஆசிரமத்தில், இயற்கை வேளாண்மை மற்றும் பசு பாதுகாப்பு குறித்த மாநில மாநாடு நடந்தது. சேவாலயம் அமைப்பு செயலாளர் ஞானசேகர் வரவேற்றார். ஆனைமலை ததேவானந்தசரஸ்வதி சுவாமிகள் தலைமை வகித்தார்.இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசியதாவது:மரப்பணு மாற்றப்பட்ட விதைகளை பயன்படுத்துவதை தடை செய்ய வேண்டும். மக்களும் இதற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.
மீண்டும் பசுமை புரட்சி வரும் சூழ்நிலை நிலவுகிறது. இதனால், பல பாதிப்புகள் ஏற்படும். செயற்கை முறை விவசாயத்தினால், விவசாயம் மெல்ல, மெல்ல அழிந்து வருகிறது.இயற்கை வேளாண்மைக்கு நாட்டு பசுக்கள் மிகவும் உறுத்துணையாக உள்ளது. இந்தரக பசுக்கள் அழியும் அபாயம் உள்ளது. நாட்டு பசுக்களை அழியாமல் பாதுகாக்க வேண்டும். இயற்கை வேளாண்மை மற்றும் பசு பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், "வானகம்' என்ற அமைப்பை ஏற்படுத்த திட்டமிட்டுள்ளேன். இந்த அமைப்பில், இளைஞர்களை அதிகளவில் சேர்த்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவுள்ளது. இவ்வாறு, இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார். மாநாட்டில், பல்வேறு பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் பங்கேற்றனர்.

**ஆனைமலை கொப்பரை ஒரு கிலோ 33.10 ரூபாய்**

பொள்ளாச்சி : ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட ஏலத்தில் ஒரு கிலோ கொப்பரைக்கு அதிகபட்சமாக 33.10 ரூபாய் விலை கிடைத்தது.ஆனைமலை சுற்றுப்பகுதி விவசாயிகள் 45 பேர் 67 மூட்டை கொப்பரையை ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டு வந்தனர். கொப்பரையை ஐந்து வியாபாரிகள் ஏலம் கூறினர். விற்பனைக்கூட கண்காணிப் பாளர் (பொறுப்பு) சந்திரசேகர் ஏலத்தை நடத்தினார்.
முதல் தர கொப்பரை 47 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 28.10 ரூபாய் முதல் அதிகபட்சமாக 33.10 ரூபாய் வரை விலை கிடைத்தது. இரண்டாம் தர கொப்பரை 20 மூட்டை ஏலம் விடப்பட்டதில், கிலோவுக்கு குறைந்தபட்சமாக 23 ரூபாய் முதல் அதிகபட்சமாக 26.50 ரூபாய் வரை விலை கிடைத்தது.அதிகாரிகள் கூறியதாவது:பனி சீசன் குறைந்துள்ளதால் கொப்பரை உற்பத்தி அதிகரித்துள்ளது. அதேபோன்று பொங்கல் பண்டிகை சீசன் முடிந்ததும் கொப்பரை மார்க்கெட் ஏறுமுகத்தில் உள்ளதால் விவவசாயிகள் கொப்பரை உற்பத்தியில் விறுவிறுப்பாக ஈடுபட்டுள்ளனர்.கடந்த வாரத்துடன் ஒப்பிடும் போது, கொப்பரை வரத்து இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. கொப்பரை விலையும் கிலோவுக்கு 1.60 ரூபாய் அதிகரித்துள்ளது. அடுத்தடுத்த வாரங்களில் கொப்பரை விலை மேலும் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு, அதிகாரிகள் தெரிவித்தனர்.

**செயற்கை கருவூட்டில் பாட்டி, அம்மா பசு ஒரே நேரத்தில் 'கிடாரி'களை ஈன்றன**

மடத்துக்குளம் : செயற்கை முறையில் கருவூட்டப்பட்டு பாட்டி பசுவும், தாய்பசுவும் ஒரே நேரத்தில் கிடாரி கன்றுகளை ஈன்றன.மடத்துக்குளம் அருகே உள்ள வேடபட்டியில் வசிப்பவர் பாலசுப்பிரமணியம். இவர், 2002ம் ஆண்டு தோட்டத்தில் வளர்க்க பசு வாங்கி வந்தார். கர்ப்பம் தரிக்காததால், 2003ம் ஆண்டு செயற்கை முறையில் கருவூட்டப் பட்டு 278 நாட்களுக்கு பிறகு காளையை ஈன்றது. இதன் பின் 2005ல் மீண்டும் செயற்கை முறையில் கருவூட்டப்பட்டு 284 நாட்களுக்கு பின் கிடாரி கன்றை ஈன்றது. பிறந்த கிடாரி கன்று 2007ல் கர்ப்பம் தரிக்கும் பருவத்துக்கு வந்ததும் செயற்கை முறையில் கருவூட்டப்பட்டு 283 நாட்களுக்கு பின் தாயை போலவே கிடாரி கன்றையே ஈன்றது.பிறந்த பெண் கன்றும் 2009ம் ஆண்டு செயற்கை முறையில் கருவூட்டப்பட்டு 280 நாட்களுக்கு பின் கிடாரியை ஈன்றுள்ளது. இந்நிலையில், முதன்முதலில் செயற்கை முறையில் கருவூட்டப்பட்ட பாட்டி மாடு மீண்டும் 2009ல் செயற்கைமுறையில் கருவூட்டப்பட்டு 282 நாட்களுக்கு பிறகு கிடாரியை ஈன்றுள்ளது. பாட்டிபசுவும், தாய்பசுவும் ஒரே நேரத்தில் பெண் கன்றுகளை ஈன்றுள்ளன. இது குறித்து கால் நடை மருத்துவர்

முருகேசன் கூறியதாவது: இது போல் சில நேரங்களில் தான் நடக்கும், பாட்டி பசு முதல் தற்போது பிறந்துள்ள பேத்தி கன்று வரை அனைத்தும் செயற்கை முறையில் கருவூட்டப்பட்டு பிறந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது, என்றார்.

தினகரன்

**விவசாயத்தில் கவனம் செலுத்துங்கள்**

பதிவு செய்த நாள் 2/2/2010 12:27:43 AM



புதுடெல்லி : ''மற்ற நாடுகளை விட இந்தியாவில் உணவு உற்பத்தி குறைந்து விட்டது. எனவே, மாநில அரசுகள் உடனடியாக முக்கிய வேளாண் பயிர்கள் உற்பத்தியை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். இல்லை என்றால், பற்றாக்குறை பிரச்னைகளில் இருந்து நம்மால் விடுபட முடியாது'' என்று பிரதமர் மன்மோகன் சிங் கேட்டுக் கொண்டார்.

மாநில அரசுகளின் தலைமைச் செயலாளர்கள் 2 நாள் மாநாடு டெல்லியில் நேற்று தொடங்கியது. மாநாட்டை தொடங்கி வைத்து பிரதமர் மன்மோகன் சிங் பேசியதாவது:

உணவு தானிய இருப்பு போதிய அளவு இருப்பதால் கவலையில்லை என்று தவறாக எண்ணிக் கொண்டிருந்தோம். விலைவாசியை நம்மால் கட்டுப்படுத்தி விட முடியும் என்று சிலர் நினைத்தார்கள். ஆனால், மக்கள் தொகை பெருக்கம், உயர்ந்த வாழ்க்கைத் தரம் போன்றவற்றால் உணவு தானிய விநியோகத்தை அதிகரிக்க முடியாமல் போய் விட்டது. உலகில் முக்கியமான பிற நாடுகளை விட நம்நாட்டில் உணவு உற்பத்தி குறைந்து விட்டது. எனவே, மாநில அரசுகள் உடனடியாக முக்கிய வேளாண் பயிர்கள் உற்பத்தியை அதிகரிப்பதில் அதிக கவனம் செலுத்த வேண்டும்.

அத்தியாவசிய பொருட்கள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை ஈடுகட்ட உற்பத்தியை பெருக்காவிட்டால் நம்மால் பிரச்னைகளில் இருந்து விடுபட முடியாது. இந்த விஷயத்தில் மாநில அரசுகள் உரிய வியூகம் வகுத்து செயல்பட வேண்டும். மாநில அரசுகளுக்கு எல்லா விதத்திலும் மத்திய அரசு துணை நிற்கும். பொது விநியோகத் திட்டத்தை வலுப்படுத்தி, ஏழைகள் மற்றும் சாதாரண மக்களுக்கு அத்தியாவசிய பொருட்கள் கிடைக்கச் செய்ய வேண்டும். விவசாய உற்பத்திக்கு திறமையான ஆணையர்களை நியமிக்க வேண்டும். சமீபகாலமாக இந்தப் பணியில் தொய்வு ஏற்பட்டது வருந்தத்தக்கது.

மோசமான சாலைகள், மின்பற்றாக்குறை, துறைமுகங்களில் நெரிசல், விமானங்களின் தாமதம் போன்றவற்றால் நமது வளர்ச்சியின் வேகம் தடைபட்டு விடுகிறது. எனவே, மாநில அரசுகள் உள்கட்டமைப்பு வசதிகளில் அதிக கவனம் செலுத்தி முதலீடுகளை கவர வேண்டும்.

இப்போதைய தலைமுறைக்கு மட்டுமின்றி வருங்கால தலைமுறைக்கும் பருவநிலை மாற்றம் மிரட்டல் விடுகிறது. இந்த விஷயத்தில் நமது குறிக்கோளை அடைவதற்கான தேசிய திட்டங்களை மாநில அரசுகள் செயல்படுத்த வேண்டும். இப்போது, அரசாங்கத்தின் பணி விரிவடைந்து வருகிறது. நீதிமன்றம், சட்டப்பேரவை, ஊடகம் போன்ற எல்லா தரப்பினரின் கடமையும் அதிகரித்து இருக்கிறது. மக்களின் எதிர்பார்ப்பு அதிகரித்து இருப்பதே இதற்கு காரணம். அதிக எதிர்பார்ப்பு மக்களை பொறுமை இழக்கச் செய்து விடும். அரசாங்கத்தின் எல்லா மட்டத்திலும் முன் எப்போதும் இல்லாத அளவுக்கு அக்கறையின்மை, சோர்வு, ஊழல் பரவி விட்டது. இதனால் மக்கள் மனக்கசப்பு அடைந்துள்ளனர். இதை போக்க அரசு அதிகாரிகள் சுறுசுறுப்பாகவும், துரிதமாகவும், நேர்மையுடனும் செயலாற்ற வேண்டும். புதுமையான முறைகளை கையாள வேண்டும்.
இவ்வாறு மன்மோகன் சிங் பேசினார்.

### 50,000 ஏக்கர் பாசனத்துக்கு சாத்தனூர் அணை திறப்பு

பதிவு செய்த நாள் 2/2/2010 12:42:25 AM



தி.மலை : சாத்தனூர் அணை நேற்று திறக்கப்பட்டது. இதனால், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களில் 50 ஆயிரம் ஏக்கர் பாசன வசதி பெறும்.
சாத்தனூர் அணை நீர்ப்பாசனத்தை நம்பி, திருவண்ணாமலை மாவட்டத்தில் 19,463 ஏக்கரும், விழுப்புரம் மாவட்டத்தில் 30,537 ஏக்கரும் உள்ளன. அணையின் மொத்த நீர் மட்டம் 119 அடி. நீர் கொள்ளளவு 7,321 மில்லியன் கன அடி.
மழை குறைந்ததால் அணை முழுமையாக நிரம்பவில்லை. அணையில் தற்போது 107.10 அடி தண்ணீர் உள்ளது. எனவே, 44 நாட்களுக்கு சுழற்சி முறையில் தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. அதன்படி நேற்று காலை 7 மணிக்கு சாத்தனூர் அணை இடது மற்றும் வலதுபுற கால்வாயில் இருந்து பாசனத்துக்கான தண்ணீரை மாநில உணவுத்துறை அமைச்சர் எ.வ.வேலு திறந்து விட்டார்.
வரும் ஏப்ரல் 21ம் தேதி வரை சுழற்சி முறையில் தண்ணீர் திறக்கப்படும். இடதுபுற கால்வாய் வழியாக வினாடிக்கு 350 கன அடி வீதமும், வலதுபுற கால்வாய் வழியாக வினாடிக்கு 225 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. அணையை திறந்த பின், அமைச்சர் எ.வ.வேலு கூறியதாவது: கடந்த ஆண்டு அணை முழுமையாக நிரம்பியதால், 100 நாட்களுக்கு மேலாக தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது தண்ணீர் குறைவாக இருப்பதால் 44 நாட்கள் திறக்கப்படுகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் 16,633 ஏக்கர் பாசன வசதி பெறும் வகையில் ரூ.197 கோடியில் நீர்ப்பாசன திட்டங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கூறினார்.

### பொருளாதாரம் பற்றி சர்வதேச மாநாடு

பதிவு செய்த நாள் 2/2/2010 12:32:37 AM

சென்னை : பொருளாதாரத்தில் புதுமைகள் புகுத்துவது பற்றிய சர்வதேச மாநாடு சென்னையில் 5ம் தேதி தொடங்குகிறது.
சென்னை கிறிஸ்துவ மகளிர் கல்லூரி முதல்வர் ரிட்லிங் மார்கேட் வாலர், நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டி: 'பொருளாதாரத்தில் புதுமைகள் புகுத்துவது' தொடர்பான சர்வதேச மாநாடு, வரும் 5, 6ம் தேதிகளில் எங்கள் கல்லூரியில் நடக்கிறது. இதில் தொழிற்சாலைகள், வர்த்தக நிறுவனங்கள், ஏற்றுமதியாளர்கள் உட்பட 400 நிபுணர்கள் பேசுகின்றனர்.
கடந்த 2008ம் ஆண்டில் ஏற்பட்ட நிதி நெருக்கடியினால் நிறுவனங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், தொழில் வளர்ச்சிக்கான தீர்வுகள் மற்றும் பொருளாதாரத்தில் புதுமைகளை புகுத்துவது தொடர்பாக பேசப்படும் இந்த மாநாட்டை, வணிக வரித்துறை அமைச்சர் உபயதுல்லா தொடங்கி வைக்கிறார். சென்னை பல்கலைக் கழக துணைவேந்தர் திருவாசகம், அமெரிக்காவில் தொழில் அதிபராக விளங்கும் சென்னையைச் சேர்ந்த காஞ்சனா ராமன் ஆகியோர் பங்கேற்கின்றனர்.
மேலும் அமெரிக்கா, மலேசியா, இங்கிலாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த நிபுணர்களும் இந்த மாநாட்டில் பேசுகின்றனர். சுமார் 122 ஆராய்ச்சி கட்டுரைகள் வாசிக்கப்படும். பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 1000க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
இவ்வாறு ரிட்லிங் மார்கேட் வாலர் கூறினார்.

## வீட்டுக்கு 3 மரக்கன்று நடும் திட்டம் மாவட்டத்தில் 10.50 லட்சம் மரக்கன்றுகள் நட ஏற்பாடு தீவிரம்

பதிவு செய்த நாள் 2/2/2010 1:43:40 AM

விருதுநகர் : விருதுநகர் மாவட்டத்தில் வீட்டுக்கு 3 மரக்கன்றுகள் வீதம் 10.50 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டத்தில், தேக்கு, தென்னை, நெல்லி செடிகள் மாணவர்கள் மூலம் ஜூன் 5ம் தேதி முதல் விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கான ஏற்பாடுகள் தீவிரமாக நடந்துவருகிறது.
உலக சுற்றுச்சூழல் தினம் மற்றும் உலக வெப்பமயமாவதை தடுக்கும் வகையில் வீட்டுக்கு 3 மரக்கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. விருதுநகர் மாவட்டத்தில் உள்ள 997 பொதுப்பணித்துறை மற்றும் ஊராட்சி கண்மாய்களில் கருவேல முட்களை அடியோடு அகற்றிட மதிப்பீடுகள் தயாரித்து ஏலம் விட உத்திரவிடப்பட்டுள்ளது.
மாவட்டத்தில் தென்னை மரக்கன்று, தேக்கு மரக்கன்று, நெல்லி மரக்கன்று தலா 3.50 லட்சம் கன்றுகள் வீதம் மொத்தம் 10.50 மரக்கன்றுகள் பள்ளி, கல்லுரிகள், கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள் மூலம் விநியோகிக்கப்பட உள்ளன.
மேலும் மரக்கன்றுகளை வீடுகளில் நடும் வகையில் பள்ளி, கல்லு£ரி ஆசிரியர்கள் மாணவர்களை தயார்படுத்த பள்ளி, கல்லு£ரி, பாலிடெக்னிக், பொறியியல் கல்லு£ரி முதல்வர்கள் பங்கேற்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் பிப்.4ல் நடைபெற உள்ளது. அதன்பின் மாணவர்கள் மூலம் வீட்டிற்கு 3 மரக்கன்றுகள் வீதம் ஜுன் 5ம் தேதி முதல் 10.50 லட்சம் மரக்கன்றுகள் நடப்படும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## விருதுநகர் மாவட்டத்தில் கோழி வெள்ளை கழிச்சல் நோய்க்கு தடுப்பூசி முகாம்

பதிவு செய்த நாள் 2/2/2010 1:43:07 AM

விருதுநகர் : கோழிகளை தாக்கும் வெள்ளை கழிச்சல் என்பது புறக்கடைக் கோழி கள், பண்ணை கோழிகள், வான்கோழிகள் மற்றும் வாத் துக் களை தாக்கும் வை ரஸி னால் பரவும் நோயாகும்.
இந்நோய் தாக்கிய கோழி கள் வெள்ளை நிறத்தில் கழிச்சல் ஏற்பட்டு இறக்க நேரிடும். இதனை கொக்கு நோய் என்று மக்கள் வழக்கு மொழியில் அழைப்பர். இந் நோய் வெயில் காலத்தில் அதிகளவில் பரவும். இதனை தடுக்க 8 வாரத்திற்கும் மேற் பட்ட கோழிகளுக்கு வருடம் ஒரு முறை தடுப்பூசி போடவேண்டும்.
சிறப்பு முகாம் பிப்.2ம் தேதி (இன்று) முதல் மாவட்டத் தில் உள்ள கால்நடை மருந்தகங்கள் மற்றும் கிளை நிலையங்கள் மூலம் நடத்தப் பட உள்ளது. இந்த முகாம்களில் 1.15 லட் சம் கோழிகளுக்கு தடுப்பூசி கள் இலவசமாக

போடப்பட உள்ளன. இம்முகாமை புறக் கடை கோழி வளர்ப்போரும், பண்ணையாளர்களும் பயன்படுத்தி கொள்ளலாம் என கால்நடைத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

### ராமநாதபுரம் விவசாயிகளுக்கு மானிய விலையில் பயிர் கருவிகள்

பதிவு செய்த நாள் 2/2/2010 1:36:20 AM

ராமநாதபுரம் : ராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் பயிர் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது என வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்தார்.
மண்டபம் வட்டாரத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் பயிர் பாதுகாப்பு கருவிகளான கைத் தெளிப்பான், ஆயில் மோட்டார் பம்பு மானியத்தில் வழங்கப்படுகிறது.
நவம்பர், டிசம்பர் மாதங்களில் அதிக அளவு மழை பெய்து குளங்கள் மற்றும் தாழ்வான பகுதிகளில் நீர் தேங்கியுள்ளது. இந்த நீரை பயன்படுத்தி, தண்ணீர் குறைந்தளவு தேவைப்படும் பயறு வகை பயிர்கள், எள், நிலக்கடலை சாகுபடி செய்யலாம்.
நெல் சாகுபடியின்போது கடைசி தண்ணீர் பாய்ச்சுவதற்கும், நெல் அறுவடைக்கு பிறகு இருக்கின்ற தண்ணீரை பயன்படுத்தி பயறு வகைப்பயிர்கள், எள், நிலக்கடலை போன்ற சாகுபடி செய்யவும், தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் ஆயில் மோட்டார் பம்பு செட்டுகள் மானியத்தில் வழங்கப்படுகிறது.
விவசாயிகள் தங்களுக்கு தேவையான ஆயில் மோட்டார் பம்பினை வாங்கி, உரிய ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட வட்டார விரிவாக்க அலுவலரை சந்தித்து மானியம் பெற்றுக் கொள்ளலாம். ஒரு ஆயில் மோட்டாருக்கு அதிகபட்சமாக ரூ. 10 ஆயிரம் மானியம் வழங்கப்படும்.
ஆயில் மோட்டார் பம்பின் குதிரைத்திறன் 5 முதல் 10 வரை இருத்தல் வேண்டும். அதேபோன்று கைத் தெளிப்பான் 50 சதவீதம் மானியத்தில் வழங்கப்படுகிறது என உச்சிப்புளி வேளாண்மை உதவி இயக்குநர் ஷேக் அப்துல்லா தெரிவித்தார்.
மண்டபம் வட்டாரத்தைச் சேர்ந்த மீராஷா என்ற விவசாயிக்கு மானிய விலையில் கைத்தெளிப்பானை வேளாண்மை இணை இயக்குநர் சத்தியமூர்த்தி வழங்கினார். துணை இயக்குநர்கள் ராஜேந்திரன், சக்திமோகன் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### 28 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள்

பதிவு செய்த நாள் 2/2/2010 1:38:36 AM

சிவகங்கை : சிவகங்கை மாவட்டத்தில் 28 இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ஜெயம் அறிக்கை: சிவகங்கை வேளாண்மை விளைபொ ருள் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தின் கொல்லங்குடி கொள்முதல் நிலையம் மற்றும் கத்தப்பட்டு, அழகமாநகரி, மறவமங்கலம், சூசையப்பர்பட்டினம், புலியடிதம்பம், கோட்டையூர், கண்ணமங்கலம், தாயமங்கலம், முனைவென்றி, தஞ்சாக்கூர், இடைக்காட்டூர், ராஜகம்பீரம், கரிசல்குளம், சாக்கோட்டை, குன்றக்குடி, நாட்டுச்சேரி களத்தூர், எஸ்.புதூர், சிங்கம்புணரி, பிரான்மலை, திருவேகம்பத்தூர், கண்ணங்குடி, கண்டவராயன்பட்டி, சித்திவயல், தர்மபட்டி, கிருங்காக்கோட்டை, திருக்காளப்பட்டி, அனுமந்தக்குடி உள்ளிட்ட இடங்களில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 28இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்களில் அமைக்கப்பட்டுள் ளன. விவசாயிகள் தங்களி டம் உள்ள உபரி நெல்லினை நேரடி கொள்முதல் நிலையங்களில் அரசு விலையில் விற்பனை செய்து பயன்பெறலாம்.

### வள்ளியூர் கூட்டுறவு வங்கியில் கடன் வழங்கும் விழா

பதிவு செய்த நாள் 2/2/2010 1:48:56 AM

நெல்லை : நெல்லை மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி வள்ளியூர் கிளையில் கடன் வழங்கும் விழா மற்றும் வாடிக்கையாளர் சந்திப்பு முகாம் நடந்தது. மத்திய கூட்டுறவு வங்கி இணைப்பதிவாளர் தனி அதிகாரி மீராபாய் தலைமை வகித்து கடன்களை வழங்கினார். பொதுமேலாளர் பாரதி முன்னிலை வகித்து பேசினார். உதவி பொதுமேலாளர் ஜாபர்அலி வரவேற்றார்.
வள்ளியூர் தொடக்க கூட்டுறவு கடன் சங்க முன்னாள் தலைவர் செங்குட்டுவன், மகளிர் குழு சார்பில் நித்தியகல்யாணி, வாடிக்கையாளர் சார்பில் பெருமாள் ஆகியோர் பேசினர். வங்கி முன்னாள் உதவி பொதுமேலாளர் சோமசுந்தரம், ஊழியர்கள் அண்ணாத்துரை, மாவட்ட கூட்டுறவு ஒன்றிய தனி அலுவலர் ஸ்டான்லி, பிரசார அலுவலர் பத்மநாபன் உட்பட பலர் கலந்து கொண்டனர். கள மேலாளர் திரவியகுமார் நன்றி கூறினார்.

### தர்மபுரி மாவட்டத்தில் இன்று முதல் கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல் தடுப்பூசி

பதிவு செய்த நாள் 2/2/2010 1:51:26 AM

தர்மபுரி : தர்மபுரி மாவட்டத்தில் இன்று (2ம் தேதி) முதல் 15ம் தேதி வரை அனைத்து கிராமங்களிலும் கோழிகளுக்கு வெள்ளைக்கழிச்சல் நோய் தடுப்பூசி போட முடிவு செய்யப்பட்டுள்ளது.
இது குறித்து மாவட்ட ஆட்சியர் அமுதா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:
தர்மபுரி மாவட்டத்தில் கிராம பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் நாட்டினக் கோழிகளுக்கும், மற்ற கோழிகளுக்கும் கோடைக்காலங்களில் ஏற்படும் வெள்ளைக் கழிச்சல் நோய், இழப்புகளை ஏற்படுத்தி வருகிறது. கோழிகளுக்கு ஏற்படும் வெள்ளைக்கழிச்சல் நோயை தடுக்க கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் வாரத்திற்கு ஒருமுறை கால்நடை மருந்தகங்கள், கிளைநிலையங்கள் மற்றும் பாதுகாப்பு திட்ட முகாம்களில் தடுப்பூசிகள் போடப்பட்டு வருகிறது.
இருப்பினும் கோடைக்காலத்தில் ஏற்படும் வெள்ளைக்கழிச்சல் நோய் பாதிப்புகளை தடுக்கும் வகையில், அனைத்து கிராமங்களிலும் வரும் 2ம் தேதி (இன்று) முதல் 15ம் தேதி வரை தடுப்பூசி முகாம்கள் தினமும் மாலை நேரங்களில் போடப்பட உள்ளது.
கால்நடை உதவி மருத்துவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் கலந்து கொண்டு தடுப்பூசிகளை செலுத்த உள்ளதால் விவசாயிகள் மற்றும் கோழி வளர்ப்போர் இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
இவ்வாறு ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

தினத் தந்தி

### *கூடுதல் உர மானியத்தால் நிதி பற்றாக்குறை உயரும்*

*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*புதுடெல்லி*

*உர மானியச் செலவு அதிகரித்துள்ளதால், நடப்பு 2009–10–ஆம் நிதி ஆண்டில், மத்திய அரசின் நிதி பற்றாக்குறை மேலும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.*

*வரி குறைப்பு*

*நாட்டின் பொருளாதார வளர்ச்சியை நிலைநிறுத்திடும் வகையில், மத்திய அரசு அதிக செலவினங்களை மேற்கொண்டது. மேலும், உற்பத்தி வரி, சேவை வரியைக் குறைத்தது. இதுபோன்ற காரணங்களால், நடப்பு 2009–10–ஆம் நிதி ஆண்டில், நாட்டின் நிதி பற்றாக்குறை கடந்த 16 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு ரூ.4 லட்சம் கோடியாக இருக்கும் என்று சென்ற ஆண்டு ஜூலை மாதத்தில் தாக்கல் செய்யப்பட்ட மத்திய பட்ஜெட்டில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. நடப்பு நிதி ஆண்டில், மத்திய அரசின் உர மானியம் ரூ.49,980.25 கோடியாக இருக்கும் என*

மதிப்பிடப்பட்டு இருந்தது. இந்நிலையில், உரத்திற்கான மானியம் மேலும் ரூ.20,000 கோடி அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு நிதி ஆண்டில், மூன்றாவது தலைமுறை செல்போன் சேவைக்கான அலைவரிசை ஒதுக்கீட்டு ஏலம் வாயிலாக மத்திய அரசுக்கு ரூ.35,000 கோடி வருவாய் கிடைக்கும் என்று கணிக்கப்பட்டு இருந்தது. இந்த ஏலம் அடுத்த நிதி ஆண்டிற்கு தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து, நடப்பு நிதி ஆண்டில், இந்த வருவாய் கிடைக்காது.

செலவினம்

இந்நிலையில், நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில் மத்திய அரசு மேற்கொண்ட மொத்த செலவினம் ரூ.7.08 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. அதேசமயம், வரி வருவாய் ரூ.3.08 லட்சம் கோடி உள்பட மொத்த வருவாய் ரூ.3.99 லட்சம் கோடி என்ற அளவில்தான் உள்ளது. இதனையடுத்து, நிதி பற்றாக்குறை 3.09 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. இது, நடப்பு முழு நிதி ஆண்டிற்கான நிதி பற்றாக்குறையில் 77.30 சதவீதம் என்ற அளவில் அதிகமாக உள்ளது. இதன் அடிப்படையில் பார்க்கும்போதும் நிதி பற்றாக்குறை ரூ.4 லட்சம் கோடியை தாண்டி விடும் என்ற அச்சப்பாடு நிலவி வருகிறது.

நடப்பு நிதி ஆண்டின் முதல் ஒன்பது மாதங்களில், அன்றாட செலவினங்களுக்கும், அன்றாட வருவாய்க்கும் இடையில் உள்ள வித்தியாசமான வருவாய் பற்றாக்குறையும் ரூ.2.51 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.